விலை ரூபா: 5.00 பக்கங்கள்:-பத்து

Registered as a News paper in Sri Lanka

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்


# வலம்புரி

VALAMPURI

சங்கு 03 வள்ளுவர் ஆண்டு 2033 ஆனி 06 வியாழக்கிழமை (20.06.2002) தொலைபேசி 3378 ஒலி 183


நங்கையர் விரும்பும் நவீன டிசைன் தங்க நகைகளுக்கு...




74, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## ஒப்பந்த விடயம் அமுல்படுத்தப்படவில்லை

# சமாதானத்தில் அரசு அசமந்தம்

# பேச்சுவார்த்தை தாமதமாகும்!

## தமிழ்ஹார்டியன் பத்திரிகை செய்தி

(லண்டன்)

**இலங்கை அரசிற்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள யுத்த நிறுத்த புரிந்துணர்வு உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள முக்கிய விடயங்களில் இலங்கை அரசு திருப்திகரமாக நடந்து கொள்ளத் தவறிவிட்டது.**

**இதனால் சமாதானப் பேச்சுவார்த்தைகளை உடனடியாக ஆரம்பிக்க முடியாதிருப்பதாக லண்டனில் இருந்து வெளிவரும் தமிழ் ஹார்டியன் பத்திரிகை தனது தலைப்புச் செய்தியில் எச்சரித்துள்ளதாக ராய்டர் செய்தி ஸ்தாபனம் அறிவித்துள்ளது.**

லண்டனில் இருந்து வெளியாகும் தமிழ்ஹார்டியன் பத்திரிகையில் வெளிவந்துள்ள தலைப்புச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் இம்மாதம் ஆரம்பிக்கப்படவிருந்த சமாதானப் பேச்சுவார்த்தை உடன் ஆரம்பிக்கப்படுவதற்கு புரிந்துணர்வு உடன் படிக்கை அமுல் செய்யப்படுவதில் அரசு காட்டிவரும் அக்கறையீனம் இப் பேச்சுவார்த்தையை மேலும் தாமதப்படுத்தியுள்ளது.

(10ம் பக்கம் பார்க்க)

## பதிவில்லாத வாகனங்களை பதிவுசெய்ய விரைவில் நடவடிக்கை

### லைசன்ஸ் வழங்க ஆணையாளர் நியமிக்கப்படுவார்

(யாழ்ப்பாணம்)

யாழ் செயலகத்தில் நேற்று நடைபெற்ற மோட்டார் வாகனப் பதிவு நடமாடும் சேவையில் சுமார் ஆயிரம் பேரளவில் கலந்து கொண்டார்கள்.

நடமாடும் சேவையில் கலந்து கொண்டவர்களில் பெரும்பாலானோர் வன்னியில் இருந்து வந்தவர்களாவர்.

இவர்கள் தாம் வன்னியிலிருந்து 1990ம் ஆண்டுக்கு முன்னர் கொள்வனவு செய்த வாகனங்களை பதிவு செய்வதிலேயே ஆர்வம் காட்டினர்.

இவர்களது வாகனப்பதிவு தொடர்பாக மோட்டார் வாகனப்பதிவு ஆணையாளர் நாயகம் கே.ஜினதாசா விளக்குகையில் மோட்டார் வாகனங்களுக்கு பதிவுக்குரிய ஆவணங்கள் இல்லாத இடத்து அவர்கள் தமது வாகனங்களைப் பதிவு செய்வதற்குரிய மாற்று ஒழுங்குகள் விரைவில் எடுக்கப்படும் என்று கூறினார்.

(10ம் பக்கம் பார்க்க)

## பாரிய நிதிநெருக்கடியை அரசுசந்தித்துள்ளது

### பிரதிநிதியமைச்சர் தகவல்

(கொழும்பு)

இலங்கை சுதந்திரம் அடைந்த பின்னர் முன்னெப்போதும் சந்தித்திராத வகையில் அரசு நிதி நெருக்கடியைச் சமாளிக்க வேண்டியுள்ளதுடன் தேர்தல் காலத்தில் தாம் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றமுடியாத நிலையில் அரசு இருப்பதாகவும் பிரதி நிதி அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக பிரதி அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவிக்கையில் கூறியிருப்பதாவது:

வருங்காலத்தில் எந்தக் கட்சி

(10ம் பக்கம் பார்க்க)

## சமாதான முயற்சிக்கு பொ.ஐ.முன்னணியின் ஆதரவைப்பெற குழு நியமிக்கப்படும்

### தமிழ்க் கூட்டமைப்பினரிடம் பிரதமர் தெரிவிப்பு

(கொழும்பு)

அரசு தற்போது மேற்கொண்டு வரும் சமாதான முயற்சிகள் தொடர்பாக அனைத்துக்கட்சிகளின் ஆதரவைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் பொ.ஐ.முன்னணியினதும் ஆதரவைப் பெற குழு ஒன்று நியமிக்கப்படவுள்ளதாகவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா தமிழ்த் தேசியக் கூட்டணி எம்.பிக்களிடம் உறுதிபடத் தெரிவித்துள்ளார்.

அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையே ஏற்பட்டுள்ள புரிந்துணர்வு உடன் படிக்கையின் அமுலாக்கல், விடுதலைப்புலிகளின் தடை

தொடர்பாக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்கள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவை நேற்றுக் காலை சந்தித்துப் பேசிய போது மேற்கண்டவாறு அவர் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றக் கட்டடத்தொகுதியில் நேற்று முற்பகல் 11மணியளவில் நடைபெற்ற சந்திப்பில் அமை

பின்னர் முன்னெப்போதும் சந்தித்தி ராத வகையில் அரசு நிதி நெருக் கடியைச் சமாளிக்க வேண்டியுள்ள துடன் தேர்தல் காலத்தில் தாம் அளித்த வாக்குறுதிகளை நிறைவே ற்றமுடியாத நிலையில் அரசு இருப் ளார்.

இது தொடர்பாக பிரதி அமைச் சர் பந்துல குணவர்த்தன தெரிவிக் கையில் கூறியிருப்பதாவது:

வருங்காலத்தில் எந்தக் கட்சி

(10ம் பக்கம் பார்க்க)

வரும் சமாதான முயற்சிகள் தொட ர்பாக அனைத்துக்கட்சிகளின் ஆத ரவைப் பெறுவதற்கு நடவடிக்கை. எடுக்கப்படுவதுடன் பொ.ஐ.முன்னணி யினதும் ஆதரவைப் பெற குழு ஒன்று நியமிக்கப்படவுள்ளதாகவும் களிடம் உறுதிபடத் தெரிவித்துள் ளார்.

அரசுக்கும் விடுதலைப்புலிகளுக் கும் இடையே ஏற்பட்டுள்ள புரிந் துணர்வு உடன் படிக்கையின் அமு லாக்கல், விடுதலைப்புலிகளின் தடை நீக்கம், ஆலயங்கள், பாடசாலை கள், பொது இடங்களில் இருந்து இராணுவம் வெளியேறுவது ஆகியன

விக்கிரமசிங்காவை நேற்றுக் காலை சந்தித்துப் பேசிய போது மேற்கண் டவாறு அவர் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றக் கட்டடத்தொகுதி யில் நேற்று முற்பகல் 11மணியள வில் நடைபெற்ற சந்திப்பில் அமை ச்சர்கள் திலக் மாரப்பன, ஜோன் அமரதுங்கா பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ்

(10ம் பக்கம் பார்க்க)

# வலி வடக்கில் மீளக் குடியமர்த்தக் கோரி

# நேற்று மாபெரும் மக்கள் பேரணி

(யாழ்ப்பாணம்)

இராணுவ நடவடிக்கைகள் கார ணமாக வலி வடக்கில் இருந்து இடம்பெயர்ந்து குடாநாட்டின் பல் வேறு பாகங்களிலும் அகதி வாழ் க்கை வாழும் ஆயிரக்கணக்கான குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் தம்மை மீளக் குடியமர்த்துமாறு கோரி நேற்றுக் காலை வலி வட க்கு பிரதேச செயலகம் முன்பாக மறியற் போராட்டத்தையும், யாழ் செயலகம் நோக்கிய பிரமாண்ட மான பேரணி ஒன்றையும் நடத்தி யிருந்தனர்.

நேற்றைய மறியற் போராட்டத் தினையும் பேரணியையும் வலி வடக்கு புனர்வாழ்வுக் கழகமும், வலி வடக்கு விவசாயிகள் கழகமும் இணைந்து ஏற்பாடு செய்திருந்தது.

வலி வடக்கு பிரதேச செயலகம் முன்பு நடைபெற்ற மறியற் போராட் டத்தினால் பிரதேச செயலகம் முற் றாக செயலிழந்தது.

பிரதேச செயலம் முன் மறியர் போர் ஒரு புறம் நடைபெற்றுக் கொண் டிருக்க அதில் கலந்து கொண்ட

(10ம் பக்கம் பார்க்க)

# அரசு - புலிகள் கடைப்பிடித்துவரும் யுத்தநிறுத்தம் திருப்தி தருகிறது

## மணிக்கூட்டு கோபுர திறப்பு விழாவில் பிரிட்டிஷ் தூதுவர் உரை

(யாழ்ப்பாணம்)

யுத்த நிறுத்த புரிந்துணர்வு உடன் படிக்கை மூலம் இலங்கை அரசும் விடுதலைப் புலிகளும் இதுவரை காலமும் கடைப்பிடித்துவரும் அமைதி நடவடிக்கைகள் குறித்து நான் மிக வும் திருப்தி அடைகிறேன். இவ்வாறு யாழ் மணிக்கூட்டு கோபுரத்தினை சம்பிரதாய பூர்வமாக நேற்று திறந்து வைத்துப் பேசிய இலங்கைக்கான பிரிட்டிஷ் தூதுவர் செல்வி லிண்டா டபீல்ட் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் மணிக்கூட்டு கோபுரத் தை திறப்பதற்காக வந்திருந்த பிரிட்டிஷ் தூதுவர் லிண்டா டபீல்ட்டை யாழ் மாநகர மேயர் செல்லன் கந்தையன் ஆணையாளர் எஸ். இராமலிங்கம் மாநகரசபை ஊழியர கள் பொதுமக்கள் மாலை அணி வித்து வரவேற்றனர்.

தூதுவருடன் யாழ் அரச அதிபர் கே.சண்முகநாதன், புனர்வாழ்வு அமை ச்சின் செயலாளர் அ. ஜெயரத்தினம்,

(10ம் பக்கம் பார்க்க)

## சென்னை மேயர் பதவி விலகினார்

(சென்னை)

சென்னையில் மாநகராட்சி மேயர் பதவியில் இருந்து மு.க. ஸ்ராலின் நேற்று பதவி விலகியு ள்ளார்.

ஒருவருக்கு ஒரு பதவி என்ற அடிப்படையிலான் புதிய சட்டத்தின் மூலம் மேயர் பதவியை துறக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

மு.க. ஸ்ராலின் சென்னை மாந கராட்சி மேயர் பதவியுடன் தி.மு.க வின் சட்டசபை உறுப்பினர் பதவி யையும் வகித்திருந்தார். (ந-5)

## எக்ஸ்போ விமான சேவை

(யாழ்ப்பாணம்)

எக்ஸ்போ விமான நிறுவனத்தின் பயணிகள் விமான சேவை ஞாயிறு தவிர்ந்த ஏனைய நாட்களில் இடம் பெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

திங்கட்கிழமைகளில் காலையும் வெள்ளி, சனி ஆகிய நாட்களில் மாலையும் விமானசேவை இடம் பெறாததுடன் போயா தினங்களில் விமான சேவை வழமைபோல் இடம் பெறும் எனவும் அறிவிக்கப்பட்டுள் ளது. (த-5)

## மணிக்கூட்டு வீதி மக்கள் பாவனைக்கு

(யாழ்பாணம்)

கடந்த பல வருடங்களாக மக் கள் போக்குவரத்துக்கு பொலி ஸாரினால் தடைவிதிக்கப்பட்டி ருந்த மணிக்கூட்டுக் கோபுரவீதி நேற்று பொதுமக்கள் பாவனைக் காகத் திறந்துவிடப்பட்டது.

மணிக்கூட்டு கோபுர திறப்பு விழாவை ஒட்டி திறந்துவிடப்பட்ட இவ் வீதியால் யாழ். மத்திய கல்லூரிக் கும் அதற்கப்பாலும் செல்ல முடி யுமே தவிர பொது சன நூல் நிலை யத்திற்கு முன்பாகவுள்ள வீதிக்கோ திறந்த வெளி அரங்க வீதிக்கோ செல்ல முடியாது. (வ)

## மணிக்கூட்டுக்கோபுரத்தில் தமிழ் எழுத்துப்பிழை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மணிக்கூட்டுக் கோபுரத்தில் தமிழில் பொறிக்கப் பட்டுள்ள நினைவுச் சின்னத்தில் எழுத்துப்பிழை இருப்பதாக அவதா னிக்க முடிந்தது.

யாழ்ப்பாண நகரபிதா என்ற வாச கத்தில் ''யாழ்ப்பாணம்'' என்ற சொல்லில் ''ப'' விடுபட்டு ''யாழ் ப்ாணம்'' என எழுதப்பட்டுள்ளது.(ம)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

யாழ்ப்பாணம்

## சிறு விளம்பரம்

**தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக் கட்டுரைகள் 50**

மொழிவிருத்தி, சிறுவர் பாடல். சாயி கல்வி வட்ட வெளியீடு எழுதியவர் கே.வி. குணசேகரம். விபரங்கட்கு: ஹரிஹணன் பிரின்ரேர்ஸ், 224, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். போன் 2717

(5443)

# தென்மராட்சிப் பிரதேசத்தில் பணிபுரிய அரசசார்பற்ற நிறுவனங்கள் பின்னடிப்பு

## அப்பாவிப் பொதுமக்கள் ஏமாற்றம்

(தென்மராட்சி)

தென்மராட்சிபிரதேசத்தில் பணி செய்வதற்கு சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள் தொடர்ந்தும் பின்னடித்து வருவதாகத் தெரிய வருகின்றது.

இப்பகுதிகளில் மிதி வெடிகள், கண்ணி வெடிகள் செயலிழக்கச் செய்யப்படாமல் இருப்பதாலேயே தம்மால் அங்கு பணி செய்ய முடியாமல் இருப்பதாக சம்பந்தப்பட்ட அரச சார்பற்ற நிறுவனங்கள் தெரிவித்துளளன.

அப் பிரதேசத்தில் மொத்தமாகவுள்ள 60 கிராமசேவையாளர் பிரிவுகளில் 30 க்கு மேற்பட்ட பிரிவுகளில் மிதிவெடி, கண்ணி வெடி பிரச்சினைகள் எதுவும் இல்லையெனவும், இவற்றில் ஏற்கனவே குடும்பங்கள் மீளக்குடியமர்ந்துவிட்டன எனவும் தெரிய வருகின்றது.

எதுஎப்படியிருப்பினும் கூட சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்களின் உதவிகளும் சேவைகளும் இப்பகுதிக்குடும்பங்களுக்குக்கிடைக்காமை குறித்து பிரதேச மக்களும் பொது அமைப்புகளும் கவலை கொண்டுள்ளன.

(உ-7)

## மட்டு. மக்களின் நேற்றைய அகிம்சைப் போராட்டம் ஓரளவு வெற்றி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு விமானப் படைத்தள விஸ்தரிப்பை கண்டித்து நேற்று பாதிக்கப்பட்ட மக்கள் அமைதிப் போராட்டம் ஒன்றை நடத்தினர்.

மட்டக்களப்பு விமான நிலையத்துக்கென சுவீகரிக்கப்பட்ட பிரதேசத்தை மக்கள் பாவனைக்கு விடவேண்டும், ஆலயம், பாடசாலை சேமக்காலை போன்றவற்றை உள்ளடக்கிய நிலப்பரப்புகளை சுவீகரிக்கும் திட்டம் கைவிடப்படவேண்டும், நிலவும் குடி நீர் பிரச்சினைகளுக்கு தீர்வுகாணப்பட வேண்டும், போன்ற பல கோரிக்கைகளை முன்வைத்தே போராட்டம் நடத்தப்பட்டது.

புதுநகர், திமிலதீவு, சேத்துக்குடா, வலையிறவு, வீச்சுக் கல்முனை, திருப்பெருந்துறை ஆகிய மாநகர எல்லைக்குட்பட்ட 6 கிராமங்களை சேர்ந்த மக்கள் இப்போராட்டத்தில் பங்குபற்றினர்.

இப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த மக்களை மட்டக்களப்பு அரச அதிபர், சிவில் இணைப்பதிகாரி கேணல் குணசேகர ஆகியோர் உட்பட பல முக்கிய பிரதிநிதிகள் சந்தித்து உரையாடியுள்ளனர்.

இச்சந்திப்பையடுத்து சுவீகரிக்கப்பட்ட பகுதிகளிலுள்ள ஆலயங்கள், சேமக்காலைகள், பாடசாலைகள் என்பவற்றினை மக்கள் பாவனைக்காக விடுவதற்கும் அனுமதியளிக்கப்படும் என உறுதியளித்துள்ளதாக தெரியவந்துள்ளது.

(உ-8)

## தேசிய பாதுகாப்பு வரி நீக்கப்படும்

(கொழும்பு)

பெறுமதிகூட்டப்பட்ட வரி அமுலுக்கு வந்ததும் தேசிய பாதுகாப்பு வரி நீக்கப்படும் என பிரதிநிதிஅமைச்சர் பந்துலகுணவர்த்தனா நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

பொதுஜன ஐக்கியமுன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் ஜெயராஜ்பெர்னாண்டோபுள்ளே நேற்று பாராளுமன்றத்தில் கேட்ட கேள்வியொன்றுக்கு பதிலளிக்கையிலேயே பிரதியமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

(உ-8)

## இன்றைய போட்டி

(கோண்டாவில்)

இலங்கைவங்கி, வர்த்தக வங்கி ஆகியவற்றின் அனுசரணையுடன் யாழ் மாவட்ட தாச்சிச்சங்கம் நடத்தும் தாச்சிப்போட்டிகளில் இன்று கோண்டாவில் மறுமலர்ச்சி விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறும் போட்டியில் ஊர்காவற்றுறை மகாமாரி விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து கொக்குவில் வராகி விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது.

(வ-5)

## பத்திரிகைச் சபைக்கு பதில் ஆணைக்குழு அமைப்பு

### இவ்வருட இறுதியில் சாத்தியம்

(கொழும்பு)

நாட்டில் தற்போது அமுலில் இருந்துவரும்பத்திரிகைச் சபைக்கு பதிலாக இவ்வருட இறுதியினுள் பத்திரிகை ஆணைக்குழு அமைக்கப்படவுள்ளதாக ஊடகத்துறை அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் பாராளுமன்றத்தில் பத்திரிகை சபை திருத்தச் சட்டம், மற்றும் குற்றவியல் திருத்தச்சட்டங்கள் மீதான விவாதத்தின் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

பொதுஜன ஐக்கியமுன்னணி ஆட்சிக்காலத்தின் போது வெகுசனத் தொடர்பாடல் அமைச்சராக இருந்த தர்மசிறிசேனநாயக்கா, சுதந்திரமான ஊடகத்துறையை நாட்டில் அமுல்படுத்துவதற்கு சேவையாற்றிய போதும், அப்போது ஆட்சியிலிருந்த அரசு ஊடகங்கள் அனைத்திற்கும் கட்டுப்பாடு விதித்திருந்தது.

தற்போது ஆட்சியிலுள்ள ஐக்கிய தேசியமுன்னணிஅரசு அனைத்து ஊடகச் செய்தி நிறுவனங்களிற்கும் பூரண சுதந்திரத்தை கொடுத்துள்ளது எனவும் அமைச்சர் இம்தியாஸ் மேலும் தெரிவித்தார்.

(உ-6)

## பாரதி தொடக்கிய

லேயே, இக்காலத்தின்அன்றாடப் பழகு பொருட்களாகிய சிலை, செய்பலர், குப்பைத்தொட்டி, ஒளிகாட்டி (Traffie Light) முதலியவற்றை எல்லாம் பாடுபொருளாக்கினார் மஹாகவி. அவருடைய 'குறும்பா' இக்காலத்தில் விஞ்சிநிற்கும், வரதட்சணை என்னும் மாப்பிள்ளை விலைக் கொடுமையையும், சையூட்டு என்னும் லஞ்சஊழலையும், அணுக்குண்டு அபாயத்தையும், இவை போன்ற வேறு தற்காலப் பொருள்கள் கருத்துக்களையும் பற்றிப் படர்ந்துள்ளது.

மஹாகவியின்பாடுபொருள் காலத்தைஒட்டியதாகவும்இன்றைய மனிதனின் வாழ்க்கை நோக்கை அனுசரித்ததாகவும் அமைந்ததால் தமிழ்க் கவிதைக்கு ஓர்அருமையானஎளிய நடை கிடைத்தது என்பதற்கு அவருடைய ஒரு சாதாரண மனிதனதுசரித்திரம்' சரியான எடுத்துக் காட்டாக அமைந்துள்ளது. இந்தக் கவிதைக் கதை இன்றைய நடுத்தர வகுப்பு மனிதனின் வாழ்வை அடித்தளமாகக் கொண்டது.

புதுமைப்பித்தன் சொன்னது போல, 'அவனுடைய (பெருமைகளை மட்டுமல்லாமல்) சிறுமைகளை நம்பிதங்களை அதில் அவன் நாடும் வெற்றியை இலக்கியமாகச் சிருஷ்டிக்கிறது.' இதைப் படிக்கின்ற யாருக்கும் விளங்காத செய்தி என்றோ, புரியாத நடைஎன்றோசொல்லஇதிலே எதுவும் இல்லை. மாறாக தங்கள் அன்றாட வாழ்வின் அனுபவங்களே பாட்டாகியிருப்பதைக் கண்டு, எல்லோருமே அதிலே ஓர் ஆர்வம் கொள்வார்கள். எந்த மனிதனும் தன்னைப் பாராட்டிச் சொல்வதைக் கேட்டு மகிழ்கிறான். தன்னைப்பழித்துப் பேசினால் உளைகிறான். ஆனால், தன்னையும்தன்தொடர்பானவைகளையும் புறக்கணிக்கிறார்கள் அலலது இருட்டடிப்புச் செய்கிறார்கள் என்று தெரிந்தால் வெறுப்பும் கோபமுமே அடைகிறான். மனிதனின் இந்த அடிப்படை இயல்பைப் புரிந்து கொண்டு, இன்றைய இலககியம் அவனையும் அவனுடைய வாழ்வையுமே பேசுவதால், அதன் மீதுஅவனுக்5 ஓர் ஆர்வம் ஏற்படுகிறது. அதன் காரணமாக அந்தஇலக்கியமே அவனுக்கு எளிய நடைஇலக்கியமாகத்தோன்றுகிறது.

தன்னைப்பற்றிமற்றவர்கள் அக்கறை கொள்ள வேண்டும் என்று பொதுப்பட விரும்புவதோடு, தனது போக்கையும் தனக்குத் தேவையானதையும் சரிவர உணர்ந்து பேசுகிறவர்களிடம். எந்த மனிதனும் தனிப்பட்ட அன்பு வைக்கிறான். பாரதி தமதுகாலத்திற் பொங்கிய தேசிய ஆர்வத்தை சுட்டிக்குறித்துப் பாடி, எளிய நடையாளர்என்றுபெயர்பெற்றார்; பாரதிதாசன், அவர் காலத்திய தமிழ்த் தேசிய உணர்வுக்கும் தொழிலாளர் சார்பான எண்ணங்களுக்கும் உருக்கொடுத்து எளியநடைக் கவிஞர் என்றுபுகழ்பெற்றார். இன்று வாழும் கவிஞர்களிலே பலர் இன்றையமனிதனின் இலக்குஎதுஎன்றுதெரியாததாலேயே அவனிடமிருந்து விலகி நிற்கிறார்கள் ஒரு சாதாரண மனிதனதுசரித்திரத்தில், இன்றைய பெரும்பாலான மனிதர்களின் மனஓட்டத்தைச் சரியாக சுட்டிக் குறித்த ததன் மூலம் எளிய நடைக் கவிஞராக விளங்குகிறார் மகாகவி.

அறிவியலின் பலசௌகரியங்களை அனுபவிக்கின்ற இன்றைய மனிதன், அதன் தவிர்க்க முடியாததீய விளைவுகளையும் ஏற்கவேண்டியவனாகவே உள்ளான். இந்த நிலையைக் கண்டு, சிலர், ''காலம்கெட்டுப்போய் விட்டது'' என்று வாடிச் சாம்புகிறார்கள். ஆனால், பெரும்பான்மையான மக்கள் வாழ்வின் மீதும் தங்கள் ஆற்றலின் மீதும் நம்பிக்கை வைத்து, ஒருவிதமான தளரா முனைவுடனேயே மேற்செல்லுகிறார்கள், அவர்களுக்கும் வாழ்விலே தோல்விகள் உண்டென்றாலும் தங்கள் வாழ்வு ''மேட்டைக் கண்டு துளைத்துப் புகுந்தது-வெள்ளம்கண்டு வளைத்துக் கடந்தது'' என்ற உணர்வே அவர்களிடம் மேலோங்கி நின்றது, இந்த உணர்வைத் தொட்டுக் காட்டும் மஹாகவியின் கவிதை அவர்களுக்கு உவப்பாகவும் எளியதாகவும் தோன்றுவதில் வியப்பில்லை.

நீண்ட காலமாகவேதமிழ்க் கவிதைமக்கள்வாழ்வைவிட்டு விலகிப் போய்விட்டது. போய்விடவே, கவிதைச் சுவைப்பு என்பது ஒரு சிலரின் பொழுது போக்கு என்ற ஒரு நோக்கு உருவாயிற்று, ஆகவே கவிதையானது, மக்களுக்குத்தெரியாததும் தேவையில்லாததும் (சிலபோது அவர்களையே பழிப்பதும்) ஆன தடங்களில் நடைபயிலத் தொடங்கியது. அந்தநிலையில் மக்களிடையே வழங்கும்மொழியோ, மொழித் தோரணையோ (Modes of expression)கவிதையில்இடம்பெறவில்லை. அவை இடம்பெறவில்லையாகவே கவிதைச் சுவைப்பு என்பது, மக்களுக்கு விளங்காத (அயல் மொழிப் பாட்டுக் கேட்பது போன்ற) ஒரு தொழில் ஆயிற்று, அதனாலே 5'ஞ் தமிழர்களே, ''தமிழ்க் கவிதை கடுநடையில், உள்ளது. எளிய நடையில் இயன்றால் நல்லது'' என்று உரைத் தலைப்பட்டார்கள்: பாரதியும் பாரதிதாசனும் இந்த உணர்வின் விடிவுக் காலத்தவர்கள். பாட்டில் எளியநடை என்ற தத்துவத்தின் ஒரு பகுதியை மட்டுமே அவர்கள் அறிந்து வலியுறுத்தினார்கள். அதன் வளர்ச்சியும்தவிர்க்கமுடியாததொடர்விளைவுமான பொருள் எளிமை (அல்லது கருத்து எளிமை) என்னும் அம்சத்துக்கு வடிவம கொடுத்தவர்களுள் மகாகவி சிறந்தவராக விளங்குகிறார். இந்தச் சிறப்பு தற்செயலாக அமைந்ததன்று; முழு ஓர்மையோடு கவிதைத் துறையில் அவர் நிகழ்த்திய சோதனைகளுக்குக் கிடைத்த வெற்றி அது.

கட்டித்த சிந்தனை உடைய பண்டிதர்களும, கோட்பாடுகளை விழுங்கிவிட்டுச் செமித்துக் கொள்ளமுடியாதவர்களும், மோப்பதற்கும் மோந்து முணுமுணுப்பதற்குமாக எழுதப்படுவதன்று கவிதை; ஒரு சாதாரண மனிதனின் பழுதுபடா உள்ளத்திற் பாயப் பிறப்பது, என்று ஓரிடத்தில், தமது நோக்கைத் தெளிவுபடுத்துகிறார் மஹாகவி. இதில் முதலிற் குறிக்கப்பட்டவர்கள் செயற்கை மனிதர்கள்; அவர்கள் தங்களுக்கு விளங்காததையும் விளங்கி விட்டதாக நடிப்பார்கள். சாதாரண மனிதன் நடிப்புப் பயிலாதவன். அவன் தனக்குப் புரிந்ததையே சுவைப்பான். அவனுக்குப் புரியாமற் போய் விட்ட கவிதைப் பொருளை அவனுக்கு மிக அணுக்கமானதாகக் கொண்டு வந்ததே எளியநடைக் கவிதைக்கு மஹாகவி செய்தபணி. அதுவே, எளியநடைக் கவிதையாக்கத்தில் ஒரு கணிசமான பணி.

## இராசி பலன்

20-06-2002
(ஆனி 06 வியாழன்)
தசமி ந.ப 12.02 வரை
சித்திரை பி.ப 3.15 வரை
இராகுகாலம் 1.24-2.54
நல்லநேரம் 7.24-8.54

**மேடம்**
புதிய திட்டமிடல், உடல் நலக்குறைவு, எதிர்பாராத பிரச்சினை, ஆழ்ந்தசிந்தனை

**இடபம்**
சென்ற இடத்தில் செல்வாக்கு, பெரியோர் ஆதரவு, வாக்கு மேன்மை.

**மிதுனம்**
கௌரவக் குறைவு, வியாபாரநன்மை, மனஸ்தாபம், முயற்சிகைகூடும்.

**கடகம்**
தாய்வழி நினைவு, முயற்சி தாமதம், இனிய சம்பவம், மனமகிழ்ச்சி.

**சிங்கம்**
கௌரவக் குறைவு, காரிய தாமதம், மாதர் நட்பு, வாக்கு மேன்மை.

**கன்னி**
பொருள் சேர்க்கை, உணர்ச்சி வசப்படல், அன்னியர் உதவி, தனவிரயம்.

**துலாம்**
தடைப்பட்டகாரியம்கைகூடும், பிறர்உதவி, கௌரவக் குறைவு, சுவாரஸ்யம்

**விருச்சிகம்**
ஜனவசியம், நல்லமுயற்சி தெய்வசிந்தை, தொழில்முன்னேற்றம்

**தனுசு**
சகோதரர்உதவி, உடல் வியாதி, தொழில்முன்னேற்றம், வேலைக்கஷ்டம்

**மகரம்**
குடும்பமகிழ்ச்சி, வீண்கற்பனை, எதிரிகள்தொல்லை காரியதடங்கல்

**கும்பம்**
நல்லசம்பவம், பிரயாணம் சகோதரர்உதவி, பெருமையடைதல்

**மீனம்**
உற்சாகம், காரிய அலைச்சல் தெய்வதரிசனம், கீர்த்தி

(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது)

வளவன்

**மருந்தாளர் (Pharmacist) தேவை**

யாழ். ஆஸ்பத்திரிக்கு முன்பாகவுள்ள மருந்தகத்திற்கு மருந்தாளர் தேவை. நல்லசம்பளம் வழங்கப்படும். நேரில் வரவும்.

'வசந்தம் பாமசி'
456 ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(5464)

# நாடு பாழடைந்துள்ளது அதைக் கட்டியெழுப்ப அரசு பாடுபடுகிறது

## அமைச்சர் ராஜிதசேனாரட்ண

(கொழும்பு)

ஐக்கியதேசிய முன்னணி அரசு பாழடைந்த நாட்டைக் கட்டியெழுப்பும் முயற்சியில் ஈடுபட்டுவருகிறதுஎனஅமைச்சர் ராஜிதசேனாரட்ண தெரிவித்துள்ளார்.

கடந்த திங்கள் இலங்கை வானொலிக்கு அளித்தசிறப்பு பேட்டியில் அவர்மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

சீரழிந்த பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பி மக்களின் வருவாயைஉயர்த்தும் நோக்குடன் செயற்பட்டு வரும் அரசாங்கத்தை எதிர்கட்சிகள் குற்றம்சாட்டிவருகின்றன.

தற்போதைய அரசின் அமைச்சர்களின் வெளிநாட்டு பயணங்களினால் எவ்வித பயனுமில்லை. அரசு ஆட்சி அமைத்து 6மாதம்முடிவுறும் காலகட்டத்தில் கூட முக்கியமான அபிவிருத்தி முயற்சிகள் தொடர்பான சட்டதிட்டங்கள் முன்வைக்கப்படவில்லையென எதிர்க்கட்சிகள் குறைகூறுகின்றன.

ஐக்கிய தேசிய முன்னணி அமைச்சர்கள் சர்வதேச தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வதற்காகவும் இலங்கையின் அபிவிருத்திநடவடிக்கைகளை துரிதப்படுத்தவுமே இவ்வெளிநாட்டு விஜயங்கள் இடம்பெறுகின்றன.

அமைச்சர்கள் தனிப்பட்ட ரீதியில் பயணங்களை மேற்கொண்டால் அதுநிச்சயமாக சொந்தசெலவிலேயே அமையும் எனவும் தெரிவித்துள்ளார்.

நாட்டின் பொருளாதார வளர்ச்சியை மேலும்3.5சதவீதத்திற்கு கொண்டுவருவதே தற்போதைய அரசின் நோக்கமாகும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (உ-8)

## சமூக மாற்றத்திற்கான பயிற்சிப் பட்டறை

(யாழ்ப்பாணம்)

ஜி.ரி.சற் மற்றும் கியூடெக் நிறுவனம் என்பன இணைந்து அடுத்த மாத ஆரம்பத்தில் சமூக மாற்றத்திற்கான பயிற்சிப் பட்டறைகள் கருத்தரங்குகள் என்பவற்றை தீவகத்தில் நடத்தவுள்ளனர்.

இப் பயிற்சியானது சமூகங்களுக்கிடையே இடம்பெறும் பகைமை பிரிவினை-ஒற்றுமையின்மைகளைக் களைந்து அனைவரும் ஒரே சமூகங்கள் என்ற நிலைப்பாட்டை உருவாக்குவதாக அமையும் என கியூடெக் இயக்குநர் சீ.ஜி. ஜெயக்குமார் அடிகளார் தெரிவித்தார். (உ-6)

## ஆகஸ்ட் 12 இல் எதிர்க்கட்சிகள் இணைந்து ஆர்ப்பாட்ட ஊர்வலம்

(கொழும்பு)

வாழ்க்கைச்செலவு அதிகரிப்பு, அரச உடைமைகளை தனியார்மயப்படுத்தல், அரசியல் பழிவாங்கல் மற்றும் வன்முறைகளைக் கண்டித்து எதிர்க்கட்சிகள் இணைந்து எதிர்வரும் ஆகஸ்ட் 12 ஆம் திகதி ஆர்ப்பாட்ட ஊர்வலமும் சண்டனக் கூட்டத்தையும் நடத்தத் தீர்மானித்துள்ளன.

எனினும் இது இடம்பெறுவதற்குரிய இடம் இன்னமும் தீர்மானிக்கப்படவில்லை.

எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில்சுதந்திரக் கட்சியின் தலைமைஅலுவலகத்தில்நடைபெற்றஆலோசனைக் கூட்டத்தில் இம் முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இந்தஆலோசனைக்கூட்டத்தில் சிஹல உறுமயவும்கலந்து கொண்டது.

இதேவேளை, அரசாங்கம் மேற்கொண்டு வரும் சமாதான முயற்சிகளின் பாதிப்புக் குறித்தும் அம் முயற்சிகளுக்கு எதிராகவும் கூட்டம் நடத்தப்பட வேண்டும் என்று கூட்டத்தில் கலந்துகொண்ட சிலர் தெரிவித்த யோசனை நிராகரிக்கப்பட்டது. (உ-3)

## ஆசிரிய மாணவர்களுக்கு அழைப்பு

(காரைநகர்)

கோப்பாய் ஆசிரியர் கலாசாலை ஆசிரிய மாணவர்களையும், தற்போது பாடசாலைகளில் பயிற்சியில் ஈடுபட்டுள்ள கலாசாலை ஆசிரிய, மாணவர்களையும் விரிவுரையாளர்களையும் இன்று பி.ப. 2.00 மணிக்கு கலாசாலைக்கு சமுகமளிக்குமாறு கோப்பாய் ஆசிரிய கலாசாலை அதிபர் மு. பரஞ்சோதி கேட்டுள்ளார். (உ-246)

## கல்விச் சுற்றுலா

(தென்மராட்சி)

யாழ்ப்பாணம் உயர் தொழில் நுட்பக் கல்லூரி மாணவர்கள் இருதொகுதிகளாக கல்விச் சுற்றுலாவை மேற்கொண்டு நேற்றைய தினம் தென் இலங்கை சென்றுள்ளனர். (உ 77)

## தெற்கு வைத்தியர்களால் இலவச வைத்திய முகாம்

### ஞாயிறன்று ஆனைக்கோட்டையில்

(யாழ்ப்பாணம்)

இலவச வைத்திய முகாம் ஒன்றை நடத்தும் வகையில் தென் பகுதி வைத்தியர்கள் 25 பேர் டாக்டர் லக்ஸ்மன் வீரசேன தலைமையில் யாழ்ப்பாணம் வரவுள்ளனர்.

இக் குழுவில் ஒவ்வோர் தமிழ், முஸ்லிம் வைத்தியர்கள் அடங்குகின்றனர்.

ஏனையோர் சிங்கள வைத்தியர்களாவர்.

எதிர்வரும் 23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி முதல் பி.ப4 மணிவரை ஆனைக்கோட்டை வைத்திலிங்கம் வித்தியாலயத்தில் மேற்படி இலவச வைத்திய சேவை முகாம் இடம்பெறவுள்ளது.

இதில் இலவச கண்ணாடி வழங்கல், செவிப்பன்னி வழங்கல் மற்றும் வைத்திய பரிசோதனைகள் இடம்பெறவுள்ளன.

இதேவேளை, மேற்படி வைத்தியக் குழுவினரின் இலங்கை ரீதியிலான 126வது இலவச மருத்துவ சேவையும் வட பகுதிக்கான முதலாவது இலவச மருத்துவ சேவையும் இதுவென்பது குறிப்பிடத்தக்கது.

இதற்கு வேண்டிய மருந்துகள மற்றும் தேவையான பொருட்கள் தரைவழியால் எடுத்துவரப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ)

## அமைச்சு திணைக்களங்களின் செயற்பாடுகள் குறித்து புலிகளிடம் புகார்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாண சபைக்கு உட்பட்ட அமைச்சுகளின் திணைக்களங்களின் செயல்பாடுகள் குறித்து, விடுதலைப்புலிகளின் திருகோணமலை மாவட்டஅரசியல்துறையினரிடம் வடக்கு-கிழக்கு மாகாண அரசாங்க பொது உத்தியோகத்தர் சங்கம் முறைப்பாடு செய்துள்ளது.

மேற்படி சங்கம் சமர்ப்பித்துள்ள முறைப்பாட்டுக் கடிதத்தில்,

- அமைச்சுக்களிலும் திணைக்களங்களிலும் தொழிலாளர் உரிமைகள் மறுக்கப்படுகின்றன.
- தனிப்பட்ட பழிவாங்கல்கள் காரணமாக இடமாற்றங்கள் வழங்குவதில் முறைகேடுகள்நடைபெற்று வருகின்றன என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை மேற்படி சங்கப் பிரதிநிதிகளை சந்தித்துப் பேசிய விடுதலைப்புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியல் பொறுப்பாளர் ஆர்· ரூபன் கோரிக்கைகள் நியாயமானதாகவும் ஆதார பூர்வமானதாகவும் இருப்பின் அமைச்சுகளின் செயலாளர்கள் திணைக்களங்களின்தலைவர்களுடன் தொடர்பு கொண்டு விரைவில் நியாயமான தீர்வு பெற்றுத் தரப்படும் என்று உறுதியளித்துள்ளார். (உ-3)

## இலங்கை-இந்திய கப்பல் போக்குவரத்து ஆகஸ்டில் சாத்தியம்

(கொழும்பு)

இலங்கைக்கும்தூத்துக்குடிக்கும் இடையிலான பயணிகள் கப்பல்கள் சேவை ஆகஸ்ட் மாத இறுதிக்குள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக இந்தியகப்பல் போக்குவரத்துத் துறை அமைச்சர் றேட் பிரகாஷ் றோயல் தெரிவித்துள்ளார்.

அண்மையில் இலங்கை கப்பல் கழகத் தலைவர் எஸ். எம். மொம்பிக் தலைமையிலான குழுவினருடன் இது தொடர்பாக ஆலோசனை ஒன்று நடத்தப்பட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கும்-இந்தியாவுக்கும் இடையில் சேது சமுத்திர கால்வாய்த் திட்டம் அடுத்த வருடம் ஆரம்பிக்கப்படவுள்ளதும் குறிப்பிடத்தக்கது. (உ-8)

## நயினை நாகபூசணி அம்மன் பாமாலை - 11

(உற்சவகாலம்)



### திருஉலாக் காட்சி

அலைகடல் சூழ் நயினை நற் பதியினிலே
கோவில் கொண்டுறைகின்றநாகபூஷணி நீ அம்மா
அனலைதனிலிருந்து நாகம் மலர் பல சொணர்ந்து
பூசனை செய்த புராதனியே நீ அம்மா
அனர்த்தங்கள் அகன்றிட ஆலய வீதிதனில்
தினமும் வலம் வருகின்றாய் நீ அம்மா
அடியார்கள் இடர்களைந்து அருள்மழை பொழியும்
எழில் மாதுளம்பூ நிறத்தவளே நீ அம்மா
அருள்ஜோதி உனை நாடிடும் பக்தர்கள்
உளமகிழத் தருகிறாய் கோலாகலக்காட்சி இன்று
மதிஒளியில் பூந்தண்டிகை தனிலேறி நீ அம்மா'

நயினை விஜயன்

### காத்திடம்மா சைவத்தமிழ்

மனதிலே உணர்விழந்து மடியிலே பொருளிழந்து
தெப்பத்தில் ஏறிவந்தோம் நாகதேவி உனைத்துதிக்க
சர்ப்பத்தில் நீ இருக்க சப்தத்தில் ஓம் என்று
அலைகள் உனைப்பாடுதம்மா அன்னை நீ வாழிஎன்று

ஆதித்தமிழ்க்குலமாம் நாகர் குலம்வாழ
பாரின் தொன்மொழியாம் நம் பாசத்தமிழ்வாழ
வீரத்தமிழர்களாம் விறல் வேங்கைகள் வாழ
பூரித்து ஆழிதனில் காத்திடம்மா சைவத்தமிழ்

வட்டூர் வரதர்

### தாயே உனை வேண்டினேன்

நயினையில் உறையும் எம்
நாக பூஷணிதாயே உன்
வரம் வேண்டி தினமும்
நாடிவரும் பக்தருக் கருள்வாயே

இ. பிரதாயினி

### போக்கிடம்மா அவலமதை

காற்றாகி ஒளியாகி கலையாகி மழையாகி
காணற்கு அரிதாகி கருணைமிகு தாயாகி
சாற்றற்கு எளிதாகி சரணா கதியாகி
சாலமெலாம் பரந்து சாந்த ரூபினியாகி
நாற்றாகி பயிராகி நவினுறு வாழ்வாகி
நாமெலாம் நலம்தேட நயினையம் பதியோகி
போற்றற்கு பொலிவான புதுமைமிகு பூபதியே
போக்கிடம்மா அவலமதை புனிதமுடன்
வாழ்ந்திடவே

தென்புலோலியூர் பரா. றமேஸ்

### செடிலாயின தீவினைதீர்ப்பள் நயினைத்தாய்

கடிதாய்க் கடற்காற்று வந்தெற்றக் கரையில்
குடிகள் தழைத்துக் குழுமும் நாகதீபம்
அடியார் நாளும்வந் தடிபேணி வணங்கில்
செடியா யினதீ வினைத்தீர்ப்பள் நயினைத்தாய்

சிவ: சண்முகவடிவேல்

### திருவடிகள் நாம் தொழுவோம்

கல்வியுயர் பேறளித்தாய்கண்ணியமாய்வாழ்வமைத்தாய்:
நல்லவரின் நட்பதனை நாளும்பெறும் நலமளித்தாய்;
பல்விதமாய் எம்வாழ்வு பாங்குறநற் பலமளித்தாய்;
எல்லையிலா உன்னருளை என்றும்பெற வரமளித்தாய்;
வல்லவராய் நல்லவராய் வாழ்த்துப்பெற வாய்ப்பளித்தாய்
ஒல்லும்வகை உயர்தொழில்கள் உவந்துபெறும் உவப்பளித்தாய்
அல்லுபகல் அம்மாஉன் அரும்மழலைகளாய்வளர்த்தாய்
செல்விநாக பூஷணிஉன் திருவடிகள் நாம்தொழுவோம்

நயினைக்கவிஞர்
நாகசண்முகநாதபிள்ளை

# பணம் இன்றிக் கிடைக்கும் பனம் களியை பயன்படுத்துவதன் மூலம் பயன் பெறலாம்

## பொருண்மியச் செய்தி

ஆனி மாதத்தின் 3ஆவது வாரத்தில் இருந்து ஐப்பசி மாதக் கடைசி வரை பனம் பழம் பெறக் கூடிய காலம். வருடத்தில் ஒரு போகத்தில் மட்டும் பனம் பழம் கிடைக்கின்றது.

பனம் பழத்தின் களியை நல்ல உணவாகக் கொள்ளலாம். ஆயினும் எம் பகுதிகளில் உணவுக்காகப் பயன்படுத்துவது மிகவும் அரிதாகவே காணப்படுகின்றது. கால்நடைகளே கூடுதலாகப் பனம் பழங்களினை அனுபவிப்பவையாகவுள்ளன.

எம் முக்காலத்தவர் பனம் பழத்தின் களியைக் கூடுதலாக உணவாகக் கொண்டவர்கள். நாளாந்த உணவின் ஒரு வேளை உணவாகப் பனம் களியை உண்டார்கள் என முன்னோர்கள் பலர் கூறக் கேட்கலாம்.

பனம் களியில் இருந்து பனாட்டுச் செய்வதே முன் காலங்களில் பிரபல்யமாக இருந்தது. கிராமங்களில் ஒவ்வொரு வீடுகளிலும் பனாட்டுத் தயாரிப்பு முன்னைய காலங்களில் இருந்தன. இப்போது எங்கேனும் ஓரிரு இடங்களில் மட்டும் பனாட்டுத் தயாரிப்பு காணப்படக்கூடியதாகவுள்ளது. பனாட்டு மாரி காலத்துக்கான பஞ்சம் போக்கும் உணவாகக் கொள்ளப்பட்டதை முதியோர் பலரும் சொல்லக் கேட்கக் கூடியதாகவுள்ளது. வருடம் முழுவதும் சேமித்து வைக்கக் கூடிய பனாட்டைப் பஞ்சம் போக்கும் உணவாகவும், வேறு உணவுகளுடன் சேர்த்து உண்ணும் சுவையூட்டும் உணவாகவும் பனாட்டு உபயோகிக்கப்பட்டுள்ளது.

இரண்டாம் உலக மகா யுத்தகாலத்தின் பின்னர் கோதுமை மா கூடுதலாகப் பயன்படுத்தும் தேவைப்பாடு நிலவியதாலும், கோதுமைமாவின் உணவாக்க இலகுத்தன்மையும் பனம் களியின் தேவைப்பாட்டைக் குறைத்துள்ளதை ஆய்வுகள் காட்டியுள்ளன.

நாகரிக தமிழ் மக்கள் கூடுதலாக இணைந்த போது, அவர்களுடைய பழக்கவழக்கங்கள், உணவுகள் கூட மாற்றமடைந்தன. இதனால், பனம் பழக் களியைப் பாவிக்கின்ற தன்மை நாகரிக வளர்ச்சியால் அடிபட்டுப் போனதாக அறியக் கூடியதாகவுள்ளது.

யாழ்ப்பாணப் பகுதிகளிலும், தீவகங்களிலும், காரைநகர் போன்ற இடங்களிலும், தென்மராட்சிப் பகுதிகளிலும், கண்டாவளைப் பகுதிகளிலும், மன்னார் மாவட்ட வடக்கு பிரதேசங்களிலும் பனம்பழப் பாவிப்புக் கூடுதலாக அமைந்து இருந்தது.

பனம் களியானது, உடலுணவாகவும், பனாட்டுச் செய்கையின் மூலம் பல நாட்கள் வைக்கக் கூடிய உணவாகவும் பாவிக்கக் கூடியதாகும்.

'பஞ்சம் போக்கும் பனாட்டு' என்ற முதுமொழி யொன்று கிராம மக்களிடையே பேச்சுவழக்கில் உள்ளது குறிப்பிடத்தக்கது. யுத்த காலங்களில் இவ்வுணவின் தேவைப்பாடு மிகக் கூடுதலாக இருந்துள்ளது. இரண்டாம் உலக யுத்த காலத்தில் 1946க்கும் 1948 க்கும் இடையில் கடுமையான உணவுத் தட்டுப்பாடு இருந்தபோது பனம்பழக்களியின் தேவையும் பனாட்டின் தேவையும் உணரப்பட்டது. அவ்வாறு 1991 - 1993 வரையான காலத்தில் பொருளாதாரத் தடை காரணமாக பனம்களியினதும், பனாட்டினதும் தேவை உணரப் பட்டதை அறியக் கூடியதாக இருந்தது.

இக்காலத்தில் கோதுமைமா குறைந்தளவு விநியோகிக்கப்பட்ட போது அரைப்பங்கு மாவுடன் அரைப் பங்கு பனம்களி சேர்த்து உணவுகள் தயாரிக்கப்பட்டன. மாவும், பனம்களியும் சமபங்காக வெதுப்பிகளுக்குச் சேர்க்கப்பட்டன. வீடுகளில் ரொட்டிகள் அவ்வாறே மாவும் பனம்களியும் சேர்த்துத் தயாரிக்கப்பட்டன.

தட்டுப்பாட்டுக் காலத்தில் பனம்களி கை கொடுத்ததைச் சவர்க்காரத்திற்காகப் பனம்களி சேர்த்துத் துணிகள் துவைக்கப்பட்டதைப் பலர் மறந்திருக்க மாட்டார்கள். பனம்களியில் இருந்து பெறக் கூடியவையாகப் பலவுள்ளன.

பனம்களியை மூலப் பொருளாக வைத்து பற்பசை தயாராகியுள்ளது. பனை அபிவிருத்திச் சபை 'பல்மி' என்ற பெயருடன் பற்பசையைத் தயாரித்து வெளியிட்டுள்ளது.

பனம்பானம் ஒன்று வெளியிடப்பட்டுள்ளது. திடீரெனக் குளிர்பானம் தயாரிக்கக் கூடியதாக உலர்த்தப்பட்ட களிக் கலவையுடன் பனம் சீனியும் சேர்த்துப் பொதி செய்யப்பட்டுள்ளது. போத்தலில் அடைக்கப்பட்ட சோடா வகையில் ''பாம்ரா'' எனும் குளிர்பானம் வெளி வந்துள்ளது.

இவை தற்போதைய காலத்திற்கு ஏற்றவகையிலும் மக்களின் இலகுத் தன்மையான பாவிப்பு, கவர்ச்சிகர வியாபாரத் தன்மை என்பவற்றை உள்ளடக்கியுள்ளன. எனினும் பனம்களி மூலம் இப்போதும் கிராமங்களில் பலவகை உணவுகள் தயாரிக்கப் படுகின்றன.

பனம் பணியாரம் என்பது மிக விருப்புடன் கிராமத்து மக்கள் உண்ணும் உணவாகவுள்ளது. மாவுடன் பனம்களி சேர்த்து உருண்டை வடிவங்களாகப் பொரித்தெடுக்கும் பலகாரம் மிகச் சுவையானது. பனம்களியும், மாவும், தேங்காயும் சேர்ந்த 'பால்வடி' எனும் உணவும் மிகச் சுவையானது. பனம் பிடிப்புட்டு எனும் உணவு இரு நாட்கள் வரை வைத்துப் பாதுகாக்கக் கூடியது. இவ்வுணவை முன்னோர்கள் கடும் உழைப்புகளின் போது இடை உணவாக உட்கொண்டுள்ளனர்.

காட்டு வேலைகளின் போதும், வேட்டையாடச் செல்லும் போதும், கடலுக்குத் தொழிலுக்குச் செல்லும் போதும், வயல்வேலைகளில் கடும் உழைப்புடைய நேரங்களான உழுதல், அரிவு வெட்டுதல், சூடு மிதித்தல் போன்ற வேளைகளிலும் இந்தப் பனம் கொழுக்கட்டை களைப்புத் தீர்க்கும் உணவாகக் கொள்ளப்பட்டது.

பனாட்டு தனி உணவாகவும் வேறு உணவுடன் சேர்த்தும் உண்ணப்பட்டு வந்துள்ளது.

கடும் உழைப்பாளிகள் காலையில் பழங்கஞ்சியும், பனாட்டும் சேர்த்து உண்டால் தமது பசியும், மீள் வலிமையும் சேரும் என்ற நம்பிக்கை கொண்டுள்ளனர்.

பனாட்டு ஒரு வருடத்திற்குப் பாதுகாத்து வைக்கக் கூடியது. இந்தப் பனாட்டைக் கொண்டு ஏனைய மாவுடன் சேர்ந்த உணவைச் செய்ய முடியாத ஒரு குறைபாடு இருந்தது. இதுவும் தற்போது நீக்கப்பட்டுள்ளது. பனம்களியைப் பாதுகாத்து வருடம் முழுவதும் பனம் களியும் மாவும் சேர்த்துப் பலகாரங்களைச் செய்யக் கூடியதாகவுள்ளது. ஆயினும் மக்கள் இதனைப் பேணுவதில்லை. பிளாஸ்ரிக் கலன்களில் பனம்களி சேகரித்து வைக்கப்படுகிறது. இவை தேவையான அளவு, தேவையான காலத்தில் பொலித்தீன் உறைகளில் பொதி செய்யப்படக் கூடியவையாக உள்ளன.

### பனம் பழத்திலிருந்து செய்யக் கூடிய உணவுகள்.

#### 1) களியாக் உண்பது

மிகச் சுவையான உணவாகும். நல்ல முற்றிய பனம் பழம் (மரத்திலிருந்து விழுந்தது) இந்த உணவுக்கு உகந்தது. கனிந்த. பழத்தை எடுத்து நெருப்பில் வெளித்தோல் சுடுபடுமளவிற்குச் சுட வைத்து ஆறிய பின் தோலை உரித்துத் தனி விதையாக்கிக் களியைச் சாப்பிடலாம்.

களி உண்பதற்கு இன்னொரு வழியிருக்கின்றது. காடி தோய்த்து களி உண்பது. ஒரு மண் பாத்திரத்தில் பனம்பழத் தோகையை (தோலை) உரித்து எடுத்து சிறு பழப்புளியும் நீரும் சேர்த்துத் தோலை ஊறவிட்டு அடுத்த நாள் அதன் கலவையில் பனம் பழத்தைப் பிசைந்து உண்ணுதல், இது மிகச் சுவையானதும் ஒரு வேளை உணவாகக் கூடக் கொள்ளக் கூடியதுமாகும். பஞ்சமான வேளையிலும் உணவுத் தேவைக்கும் முன்னோர் இந்த உணவை ஒரு வேளை உணவாகக் கொண்டுள்ளனர்.

#### 2) பாலில் வடித்தல்

பனங்களியையும், மாவையும் சரியாகக் கலந்து சிறு சிறு கட்டிகளாகச் (சில்லுகளாக) செய்து சீனியும், தேங்காய்ப் பாலையும் காய்ச்சி அவற்றில் சில்லுகளினை இறுக விடுதல். இவ் உணவு முதல் நாள் தயாரிக்கப்பட்டு அடுத்த நாள் உண்ணும் போது மிகச் சுவையுள்ளதாக அமையும்.

#### 3) பனம்பணியாரம்

பனங்களியும்,மாவும், சீனியும் சேர்த்து உருண்டைகளாக்கி எண்ணையில் பொரித்தெடுத்தல். இவ் உணவினை இரண்டு, மூன்று நாட்களுக்கு வைத்துக்கொள்ளலாம்.

#### 4) பனம் பிட்டு

களியும், மாவும், சிறிது சீனியும், தேங்காய்த் துருவலும் சேர்த்துக் குழைத்துப் பிடிப்பிட்டுப்போல வடிவமைத்து நீற்றுப்பெட்டியில் அவித்தெடுத்துக் கொள்ளலாம்.

#### 5) பனம் பாண்

பாணுக்கு மாவைத் தயார் செய்யும்போது அரைப்பங்கு களியையும் சேர்த்துப் பாணைத் தயார் செய்யலாம். இப் பாண் இனிப்புக் கொண்டதாகவும் கவர்ச்சியான உணவாகவும் இருக்கும்.

#### 6) பாணிப்பனாட்டு

கன்டோஸ் விரும்பி உண்போருக்கு இவ்வுணவு பொருத்தமாகும். பனாட்டுடன் பதநீர் காய்ச்சிய பாகு (பனம்பாணி)வை ஊறவிட்டுச் சுவைக்காக எள்ளு, உழுந்துக் குறுணி என்பவை கலந்து பாத்திரங்களில் போட்டுவைத்தால் மிகச் சுவையாக இவ்வுணவு அமையும்.

#### 7) பனாட்டுத் தயாரிப்பது எப்படி?

நல்ல பனம் பழங்களினைத் தெரிவு செய்ய வேண்டியது மிக முக்கியமானது. அணில், பறவைகள் தீண்டாத விழுந்த பனம் பழங்களினை எடுத்துக் கழுவிப் புறத்தோல் நீக்கிக் களியைக் கறக்க வேண்டும். கறப்பதற்கு இலகுவிற்காகத் தண்ணீரைப் பாவிக்கலாம். கறந்த களியிலுள்ள தும்புகளை நீக்குவதற்காகச் சீலைத்துணி அல்லது அரிதட்டால் வடிக்கவேண்டும். வடித்தெடுக்கப்பட்ட களியைப் பனையின் 3ம், 4ம் ஓலைகளில் இருந்து தயாரிக்கப்பட்ட பாய் ஒன்றில் (சற்று உயரமான பந்தல் ஒன்றில்) பரவவிடவேண்டும். மிக மென்மையாகக் களியைப் பரவ வேண்டும்.நல்ல சூரிய ஒளி படும் இடத்தில் இந்தப் பந்தல் அமைய வேண்டும். பின்னர் அடுத்த நாளும் அதே அளவு பனங் களியை எடுத்து முதல்நாள் வார்த்தது போன்று வார்த்துக் காயவைக்கவேண்டும்.இவ்வாறு ஐந்து நாட்கள் தொடர்ந்து களி வார்த்து 8வது நாள் பாயுடன் எடுத்து பாயிலிருந்து தட்டாகப் பனாட்டை அகற்ற வேண்டும். மூன்று அங்குல அகலமும் ஏழு அங்குல நீளமும் நீள்சதுரத் துண்டுகளாக நல்ல கூர்க்கத்தியால் பனாட்டை வெட்டி மடித்தெடுக்க வேண்டும். பின் பனஞ் சார்வு கொண்டு தயாரிக்கப்பட்ட 'உமலில்' பனாட்டுக்களினை அடுக்கிக் குசினியின் அடுப்புப் புகட்டில் கட்டித் தொங்கவிட்டுப் பாதுகாப்பாக வைத்து வேண்டிய நேரங்களில் எடுத்துண்ணலாம்.

இன்று இத்தகைய உணவுகளை தயாரிப்போர் அருகிவிட்டனர். உணவை உண்போரை விரல் விட்டே எண்ணலாம். முன்னைய காலத்தில் தமிழ் மக்களது இணைந்த உணவாகப் பனாட்டு இருந்து வந்துள்ளது. இன்று ஆசைப்பட்ட உணவாகக் கூட இல்லை. இந்நிலையை மாற்ற வேண்டும் எமது தமிழீழத்திற்குக் கிடைத்த வரப்பிரசாதமாகப் பனை அமைந்திருக்கிறது. இந்தப்பனை உணவுகளினை மக்கள் உண்ணவும் இவற்றை அறியவும் வழி செய்தல் முக்கியமானது.

கே.ஏ.அற்புதராஜா,
இணைப்பாளர்,
பனை அபிவிருத்திச் சபை.

அழிந்து போன உணவு முறையை மக்கள் மீள அறிந்து கொள்ள வழிசெய்யப்பட வேண்டும்.

•கைவிடப்பட்ட உணவு வகையினை மீள உண்பதற்காக உற்பத்தி செய்யப்படல்வேண்டும்.

பணமின்றிக் கிடைக்கும் பனங்களியைப் பயன்படுத்த வேண்டும்

✦ அழிந்து போய்க்கொண்டிருக்கும் உணவு முறைகளைப் புதுப்பிக்க பனை அபிவிருத்திச் சபை தயாராக உள்ளது.

✦ சம்பந்தப்பட்டோர் கைகொடுப்பின் சபை அபிவிருத்தி செய்யக் காத்திருக்கின்றது

இதன் பொருட்டு நாளைய நாட்டின் சிற்பிகளாக இன்றைய மாணவர்கள் இவற்றை அறிய வேண்டும். பாடசாலை ஆசிரியர்கள் பலர் இளையவர்களுக்கு ஒரு கருத்தரங்கு (செயல்) மூலம் இவ்வுணவுகள் தயாரித்தலை அறிமுகம் செய்து அவர்கள் மூலம் பிள்ளைகள் பாடசாலையில் அறிய் வாய்ப்பை ஏற்படுத்தலாம்.

பாடசாலை விடுமுறைக் காலத்தைப் பயன்படுத்தி இச் செயல் முறைக்கருத்தரங்கை கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் செயது உணவை அறிமுகம் செய்து வைத்தால் தமிழ் ஈழத்தின் பொருளாதாரத்திலும் உணவிலும் பெரும்மாற்றம் உண்டாகும்.



மேலதிக அரச அதிபரும் சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் வடமாகாண ஆணையாளருமாகிய திரு.து.வைத்திலிங்கம் அவர்களிடம் யாழ் தெற்கு மாவட்ட ஆணை யாளர் செ.செல்வரஞ்சன் உண்டியலில் பணத்தைப் பெறுவதையும் மாகாண நிறைவேற்று உத்தியோகத்தர் ரீ.ஜெயரட்ணம் கொடியை அணிந்து கொடி தினத் தை ஆரம்பிப்பதையும் காணலாம்.



யாழ்ப்பாணம் தேசியக் கல்வியியற் கல்லூரியில் நடைபெறும் கல்வியியற் கண்காட் மாணவர்கள் பார்வையிடுவதை படங்களில் காணலாம்.

# இன்று ஒரு தகவல்

## போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து

எனக்கு வாழ்க்கையிலே ஒரே ஒரு ஆசைதான் சார்! என்றார் ஒருவர். அது என்ன என்று கேட்டேன். ஆசைகளை ஒழித்து விட வேண்டும் என்பது தான் என்னுடைய ஆசை என்றார்.

இப்படி ஆசைகளை ஒழிக்க வேண்டும் என்று சொல்வதையே ஒரு ஆசையாகக் கொள்வது சரியில்லை என்றார் பெரியவர்.

இதுமாதிரியான ஆசைகளை ஒழிக்க ஆசைப்பட்டால் அந்த நோக்கம் நிறைவுபெறாது. அந்த முயற்சியாலே புதிதாக சில துன்பங்கள் தான் வந்து சேரும். அதில் புதிதாக ஒரு ஆசை தலை தூக்கும் என்றார் அவர்.

ஆசைகளைத் தானாகவே விழவைத்துவிடலாம். அதற்கு வழி என்ன தெரியுமா? 'எந்த ஒரு ஆசையையுமே பூரணமாக நிறைவேற்றிக் கொள்ள முடியாது' என்பதை உணரவேண்டும். அதை உணர்ந்தால் ஆசைகள் தானாகவே விழுந்துவிடும். அதைவிட்டு ஆசைகளை விட்டுவிட வேண்டும் என்பதையே ஒரு ஆசையாக வைத்துவிட்டு... அதற்காக கடுமையான முயற்சிகளையும் செய்துவிட்டு 'நான் ஆசைகளை விலக்கி ஞானோதயம் அடைவதற்கு கடுமையான முயற்சி செய்து கொண்டிருக்கிறேன்' அப்படிச் சொல்லிக் கொண்டிருந்தால் எந்தக் காலத்திலேயும் ஞானோதயம் வரப்போகிறது இல்லை. அதற்குப் பதிலாக துன்பம் தான் வரும் என்பது அவருடைய கருத்து.

எந்த ஒரு ஆசையையும் பூரணமாக நிறைவேற்றிக் கொள்ள முடியாது என்பதை உணரவேண்டும் என்கிறார் பாருங்கள். அது சிந்திக்க வேண்டிய ஒரு விசயம்.

ஒரு ராஜா இருந்தார். அவரது மனதிலேஅமைதியில்லை. எப்பவும் கஷ்ரப்பட்டவாறே இருந்தார். இந்தத் துன்பத்தைப் போக்கிக் கொள்ள பல முயற்சிகளை செய்து பார்த்தார். ஒன்றுமே சரிவரவில்லை. கடைசியாக ஒரு காரியம் செய்தார். அதாவது ஒரு வேதாந்தியைத் தேடிப் போனார். அவரைப் பார்த்துக் கேட்டார் 'ஐயா.. என்னுடைய துன்பங்களில் இருந்து நான் விடுதலை அடைய அதற்கு சுலபமாக ஏதாவது ஒரு வழி இருந்தால் சொல்லுங்கள் என்று கேட்டுக் கொண்டார்.

அதற்கு அந்த வேதாந்தி சொன்னார், 'ஒரு வழி சொல்லுகிறேன் அதுபோல செய்...! அதாவது உன் ராஜ்யத்துக்குள்ளே 'போதும்' என்ற மனதுடன் வாழுகின்ற ஒருத்தனைக் கண்டுபிடித்து... அவனுடைய சட்டையை வாங்கி நீ அணிந்திருக்க வேண்டும். அப்படிச் செய்தால் உன்னுடைய துன்பம் தீர்ந்துவிடும்' என்றார். உடனே ராஜாவுக்கு நல்ல மகிழ்ச்சி ஏற்பட்டது.

அரண்மனையிலே இருந்த அத்தனை பேரையும் ஆளுக்கு ஒரு பக்கமாக அனுப்பினார் 'போதும்' என்ற மனதுடைய ஒருவனை தேடிப் பிடித்துக் கொண்டு வரச் சென்னார்.

எங்கெல்லாமோ தேடி, ஒரு ஆளை பிடித்துக் கொண்டு வந்தார்கள், அவன் 'போதும்' என்கின்ற மனதுடன் இருக்கிறவன் தான் ஆனால் அவனிடம் 'சட்டை' எதுவும் இல்லை! இடையிலே கட்டி இருந்த துண்டுடன் போதும் என்கின்றமனசோடு நான் வாழ்ந்து கொண்டிருக்கிறேன் 'சட்டை' இருந்தால் தானே ராஜா, வாங்கி அணிய முடியும் என்றார் வேதாந்தி. அந்த வேதாந்தி. ஏன் அப்படி சொன்னார் என்பதற்கான அர்த்தம் இப்போது தான் ராஜாவுக்கு புரிந்தது.

இதுவரைக்கும் சொன்னதெல்லாம் ஞானமார்க்கத்தை தேடிக் கொண்டிருக்கிறவனுக்கான தகவல். இன்றைய இளைஞர்கள் இதைக் கேட்டு நமக்கு ஆசையே வேண்டாம் என்ற முடிவு எடுத்து விட்டால் வாழ்க்கையிலே முன்னேறவே முடியாது. நம்முடைய முயற்சிக்கு ஆசை தான் தூண்டுகோல்.

அதனாலே இந்த 'ஆசை' யையும் அந்த 'ஆசையையும்' போட்டுக் குழம்பக் கூடாது. ஆனால் ஒன்று பேராசை நமக்குத் தேவையில்லை. நாம் விரும்புகின்ற ஆசையிலேயும் ஒரு நியாயம் இருக்க வேண்டும். ஏன்னென்றால் நம்மில் சிலபேர் நீங்கள் தானே சார் சொன்னீர்கள்... அதனாலேதான் ஆசைப்பட்டேன் அறை கிடைத்தது தான் மிச்சம். பாருங்கள் கன்னத்தை தடவிக்கொண்டு வந்து விட்டேன் அதனாலே இப்போது எந்த தகவலைச் சொன்னாலும் ரொம்ப எச்சரிக்கையாக இருக்க வேண்டியுள்ளது.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# வட - கிழக்கு மாகாணப் பாடசாலைகளில் கணிதபாட அடைவு மட்டத்தை அதிகரிக்க செயல் திட்டம் அமுல்

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு மாகாண பாடசாலைகளிலுள்ள இடைநிலை வகுப்புகளில் கணித பாடத்தின் அடைவு மட்டம் குறைவடைந்து காணப்படுகின்றது என கண்டறியப்பட்டுள்ளது.

எனவே அடைவுமட்டத்தை அதிகரிக்கும் நோக்கில் புதிய செயல் திட்டம் ஒன்றை அமுல் படுத்த மாகாணக் கல்வித்திணைக்களம் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

கணிதபாடஅடைவுமட்டம் குறைவடைந்துள்ளமைக்கு ஆசிரியர்களின் பயிற்சியற்ற தன்மை, ஆசிரியர்கள் பற்றாக்குறை, உரிய கண்காணிப்பு மற்றும் மேற்பார்வை இல்லாமை, பாடத் திட்டம் உரிய காலத்தில் பூரணப்படுத்தப்படாமைஎன்பனவே காரணம் என மாகாண கல்வித்திணைக்கள அதிகாரிகளினால் இனங் காணப்பட்டுள்ளது.

இத்தகைய நிலைமையை போக்குவதற்கென ஆசிரியர்களுக்கு மேலதிக பயிற்சிகளை வழங்கவும் பாட அலகுகள் உரிய முறையில் கற்பித்து முடிப்பதைஉறுதி செய்யவுமே இப் புதிய செயல்திட்டத்தை மாகாணக் கல்வித் திணைக்களம் நடைமுறைப்படுத்தி வருகின்றது.

(உ-3)

# சுயாதீன பொலிஸ் ஆணைக் குழு அமைப்பதுகுறித்துமங்களவலியுறுத்து

(கொழும்பு)

நாட்டில், சுயாதீனபொலிஸ் ஆணைக்குழு, மிக விரைவில் அமைக்கப்பட வேண்டுமென பொதுஜன ஐக்கிய முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

முன்னாள் பிரதியமைச்சர் சாகரரத்னாயக்காவின் ஆதரவாளர் ஒருவரை தாக்கியது தொடர்பாக, இரகசியப் பொலிஸாரால் விசாரணைக்குட்படுத்தியது குறித்துநேற்று முன்தினம் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி தலைமையகத்தில் நடத்திய செய்தியாளர் மாநாட்டிலேயே இதனை தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் குறித்து நீதிமன்றத்தில் வழக்கு விசாரணை நடைபெற்றுவருகிறது. ஆனால் வழக்கு விசாரணைநடைபெற்றுவரும் இச்சமயத்தில் குற்றப் புலனாய்வு பொலிஸ் பிரிவுதன்னைவிசாரணைக்குட்படுத்தியது சட்டத்திற்கு முரணானது எனவும் தெரிவித்துள்ளார்.

தனது அடிப்படை உரிமைகள், இவ் விசாரணை மூலம் மீறப்பட்டுள்ளதாகவும், இதற்காக பொலிஸ் அதிகாரிகள் சிலர் உட்பட உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்கா மீதும் கூட நடவடிக்கையினை தான் எடுக்கப் போவதாகவும் அவர் கூறியுள்ளார். (உ-8)

# தென்மராட்சி தெற்கு மீனவர்கள் தொழில்புரியஇன்னும்அனுமதியில்லை

(தென்மராட்சி)

தென்மராட்சி தெற்கிலுள்ள கைதடி - நாவற்குளியைச் சேர்ந்த 190 மீனவர்கள் மீன்பிடித்தொழிலுக்குச் செல்ல இன்னமும் அனுமதிக்கப்படாத நிலையில் இருந்துவருகின்றனர்.

இவர்கள் தம்மை மீன்பிடிக்கச் செல்ல அனுமதிக்கும்படி படையினரிடமும் நிர்வாக அதிகாரிகளிடமும் கோரிக்கை விடுத்திருந்த போதிலும் கூட இன்னமும் அனுமதிவழங்கப்படவில்லை.

இதேவேளை, இம் மீனவர்களினால் 2000 ஆம் ஆண்டில் கோயிலாக் கண்டி கடலில் கைவிடப்பட்டு வந்த சுமார் 90 வள்ளங்கள் காணாமல் போயுள்ளமையும்,

தமது வள்ளங்களுக்கான நஷ்டஈட்டைக் கூடப்பெற முடியாத நிலைக்கு ஆாகியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இது இவ்விதமிருக்க, கோயிலாக் கண்டி கடலில் தம்மை மீன்பிடித் தொழிலில் ஈடுபட அனுமதி தரப்படாத விடத்து சாத்வீக நடவடிக்கையில் ஈடுபடப் போவதாக இப்பகுதி மீனவப் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர். (உ-77))

# விசேட குழு அமைப்பு

(கொழும்பு)

2004 இல் அடுத்ததாக வரவிருக்கும் மின்சார நெருக்கடியை எதிர்கொள்வது எவ்வாறு என்பது பற்றி ஆராய்வதற்கென விசேட குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

இக்குழுவை பிரதமர் ரணில் நியமித்துள்ளார். (உ)

# அரிசி விலை அதிகரிப்பு வறிய குடும்பங்கள் வாட்டம்

(தென்மராட்சி)

குடாநாட்டில் நிவாரணத்துக்கு வழங்கப்படும் அரிசியின் விலை 29 ரூபா 50 சதத்தில் இருந்து 38 ரூபா 50 சதமாக அதிகரிக்கப்பட்டதனால் குடும்பத்தில் ஐந்து பேருக்கு மேல் உள்ள குடும்பம் ஒவ்வொரு மாதமும் எட்டுக் கிலோ அரிசியைஇழக்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது,

29 ரூபா 50 சதவிலையில் வழங்கப்பட்ட அரிசி குடும்பத்துக்கு பத்துத் தினங்களுக்குப் போதுமானதாக இருந்தது. ஆனால் கூடிய விலைப்பெறுமதியில் நிவாரண அரிசி வழங்கப்படுவதால், அவ் அரிசி ஒரு சில தினங்களுக்கே போதுமானதாகக் கருதப்படுகின்றது.

இதன்பொருட்டுநிவாரணப் பொருள்களில் மட்டுமே தங்கியிருக்கின்ற குடும்பங்கள், மாதத்தில் கூடிய நாட்கள் தமது பட்டினியைப் போக்குவதற்கு வேறு வழிவகைகள் இன்றியுள்ளனர். (உ-77)

குற்றப்புலனாய்வு பொலிஸாரால்

# முன்னாள் அமைச்சர் செனிவிரட்ணா விசாரணை

(கொழும்பு)

முன்னாள்அமைச்சர்ஜோன் செனிவிரட்ணாவைகுற்றப்புலனாய் வு பொலிஸார் கடந்த திங்கட்கிழமை விசாரணை செய்துள்ளனர்.

பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சிக்காலத்தின் போது, அரசுக்குச்சொந்தமான வாகனங்களை துஷ்பிரயோகம் செய்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் இவர் இரண்டுமணி நேரம் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளார்.

சமுர்த்தி அதிகாரசபைக்குச் சொந்தமான வாகனங்களை இவரும், இவரது ஆதரவாளர்களும்துஷ்பிரயோகம்செய்துள்ளனர் என குற்றப்புலனாய்வு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் லயனல் குணதிலக தெரிவித்துள்ளார்.

கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலின் போது ஆயிரத்துக்கும் அதிகமான அரசவாகனங்கள் காணாமல் போயுள்ளதும் குறிப்பிடத்தக்கது. (உ-8)

# முன்பள்ளி விளையாட்டு போட்டி

(காரைநகர்)

தங்கோடை முன்பள்ளி, அம்பாள் முன்பள்ளி ஆகியன இணைந்து நடத்தும் விளையாட்டுப் போட்டி இன்று பி. ப. 2.00 மணிக்கு காரைநகர் சுப்பிரமணிய வித்தியாலயத்தில் அம்பாள் முன்பள்ளி இயக்குநர் நா. குகனேசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் ஜே. எக்ஸ். செல்வநாயகம், காரைநகர் இந்துக்கல்லூரி அதிபர் மு. சு. வேலாயுதபிள்ளை ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (உ-246)

## சிந்தனைக்கு விருந்து

### இன்றும் வந்தன இவை அவன் போட்டோ!

'என்மகன் கனடா சென்றங் (கு)
இருந்துபத் தைந்தென் றென்றும்
அன்புடன் அனுப்பு கின்றான்
அறியும்' என் றார்க றுத்தார்
'பின்னும்ஏன் கடன்?' என் றார்க்குப்
'பேயக்கதை பேசு கின்றீர்
இன்றும்நான் ஐந்து பெற்றேன்
இவை அவன் போட்டோ?' என்றார்.

- பழையவன்

# பறக்கும் தட்டில் வேற்றுக்கிரகவாசிகள்!

## வெறும் கட்டுக்கதை என்கிறார் ஆதர் சி. கிளார்க்

(யாழ்ப்பாணம்)
நாட்டின் பல பிரதேசங்களிலும் 'பறக்கும் தட்டு' போன்ற விநோதப் பொருட்களை ஆகாயத்தில் கண்டதாக பொதுமக்கள் கூறுகின்ற தகவல்களை அடிப்படையாக வைத்து வேற்றுக்கிரகவாசிகள் பற்றிய முடிவுக்கு நாம் வந்து விடக்கூடாது.

இவ்வாறு உலகப்புகழ் பெற்ற விஞ்ஞான புனைகதை எழுத்தாளரும் விண்வெளி ஆராய்ச்சி விஞ்ஞானியுமான ஆதர்சி. கிளார்க் வலியுறுத்தியுள்ளார்.

இவ்வாறு வேறு கிரகங்களிலிருந்து பறக்கும் தட்டு மூலம் பூமிக்குவந்து செல்வதாக வெளியாகும் ஊகங்கள் எல்லாம் வெறும் கற்பனைத் தோற்றங்கள் என அவர் மேலும் விபரித்துள்ளார்.

இதேவேளை, இந்த மர்மப் பொருள்களை படம் எடுக்கச் சென்ற விஞ்ஞானிகள் இவை படமெடுக்கும்போது மறைகின்றன என்று தெரிவித்துள்ளனர். (உ-3)

## இயக்குநர் சபைக் கூட்டம்

(தென்மராட்சி)
அறவழிப் போராட்டக்குழுவின் இயக்குநர் சபைக்கூட்டம் எதிர்வரும் 23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு. ப. 11.00 மணிக்கு கைதடி நுணாவிலில் உள்ள அறவழி போராட்டக்குழு அலுவலகத் தலைமையகத்தில் தலைவர் டாக்டர் எஸ். எஸ். அருளானந்தம் தலைமையில் நடைபெறவுள்ளது. (உ-77)

# தமிழரின் தனித்துவங்களை அழிக்க தீய சக்திகள் சில சதித் திட்டம்

## விழிப்பாய் இருக்குமாறு புலிகள் அறிக்கை

(மட்டக்களப்பு)
சமாதான நல்லுறவுஎனும் போர்வையில் படையினரால் நடத்தப்படும் விளையாட்டு நிகழ்வுகள், களியாட்டங்கள், உல்லாசப் பயணங்கள், இன்னிசை நிகழ்ச்சிகள் எல்லாமே தமிழர்களது கலைகளையும், கலாசாரத்தையும், பண்பாட்டையும் தேசியப்பற்றுணர்வையும் சீர்குலைக்கும் போர்த்தந்திரங்கள் என்பதைப் பெற்றோர்கள் உணர்ந்துசெயற்படவேண்டும்

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின்மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட அரசியல் துறை வெளியிட்டுள்ள அறிக்கையில் இவ்வாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அவ் அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, படையினரதும், அவர்களுக்குத் துணைபோகும்தேச விரோத சக்திகளினதும் சதித் திட்டங்களுக்குஎமதுமக்களும் வருங்காலச் சந்ததியினரும் பலியாகிவிடாது விழிப்பாக இருந்து இவ்வாறான நிகழ்வுகளுக்கு எதிர்ப்புத்தெரிவிக்க வேண்டும்.

இளம் சந்ததியினரின் சிந்தனையைத் திசை திருப்பிஎமது சமூகக் கட்டமைப்பை உடைத்து கல்வியையும் கலாசாரத்தையும் பண்பாட்டுக் கோலங்களையும் அழித்துவிட சில தீயசக்திகள் திட்டமிடுகின்றன.

தமிழீழத்தில் தமிழர்களது நீண்ட வரலாற்றில் தமிழ் மொழியும் கலையும் பண்பாடும் எமது மக்களின் பண்பாட்டுக் கோலங்களின்ஆதாரமாக வேரூன்றி விழுதுவிட்டு விருட்சமாக நிற்கிறது.

தமிழீழத் தமிழர்களது உடல்களை அழித்தாலும் உடைமைகளைச் சிதைத்தாலும் எமது இனத்தின் இதயமாக விளங்கும் பண்பாட்டு வாழ்வை எவரும்அழிக்கவோ சிதைக்கவோ அனுமதிக்க முடியாது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (உ)

# ஹெலிகள்கொள்வனவுஊழல் இடைக்கால அறிக்கை விரைவில் சமர்ப்பிப்பு

(கொழும்பு)
கடந்த பொ.ஐ.மு ஆட்சியின் போது இலங்கை விமானப்படைக்காகக்கொள்வனவு செய்யப்பட்ட எம் ஐ.24 ரக ஹெலி கொப்டர்களுக்கான கொடுக்கல் வாங்கல்களின் போது இடம்பெற்றதாகக் கூறப்படும் ஊழல் பற்றிய இடைக்கால அறிக்கை விரைவில் பாதுகாப்பு அமைச்சரிடம்சமர்ப்பிக்கப்படவுள்ளது.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்டின் பெர்னாண்டோ இவ்அறிக்கைகள் வெளிவந்ததும் அடுத்தகட்ட நடவடிக்கைகள் உடனடியாக ஆரம்பிக்கப்படும் என்றும் தெரிவித்துள்ளார். (உ-3)

# யாழ். சேவையில் தமிழ் ஒலிபரப்பு தனியான அலைவரிசையில்

(யாழ்ப்பாணம்)
இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின்யாழ்.சேவையில் தமிழ்ப் பிரிவு தனியாக இயங்கவுள்ளது.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச் சேவைப் பணிப்பாளர் என் எஸ். சிவராசா இத்தகவலைத் தெரிவித்தார்.

தற்போது தமிழ்,சிங்கள சேவைகள் ஒரேஅலைவரிசையில் ஒலிபரப்பப்படுவதால் மட்டுப்படுத்தப்பட்ட சேவையையே நேயர்கள் பெற்றுக் கொள்ள முடிவதாகவும்,

தமிழ்ச் சேவையை விரிவுபடுத்தும் வகையிலேயே தனியான அலை வரிசையில் ஒலிபரப்ப விரைந்து நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை,யூலை மாத இறுதியில் அல்லது ஓகஸ்ட் மாத நடுப்பகுதியில் இந் நடைமுறை அமுலுக்கு வரவுள்ளது. (உ-5)

# போயாதின ஆன்மீக நிகழ்ச்சிகள்

(யாழ்ப்பாணம்)
யாழ். பகவான் ஸ்ரீசத்திய சாயிசேவா நிலையத்தில் போயாதின ஆன்மீக நிகழ்ச்சிகள் எதிர்வரும் 24 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9.00 மணிக்கு இடம்பெறவுள்ளன.

ஓம் காரம்,காயத்திரிமந்திர ஜெபம், இலட்சார்ச்சனை பண்ணிசை, பஜனை, வைத்திய கலாநிதி ஆர். மகேஸ்வரனின் சொற்பொழிவு ஆகியன அன்றை தினம் இடம்பெறவுள்ளன. (உ-8)

# கணனிக் கல்வி நிலையங்கள் அமைக்க கல்வியமைச்சு உத்தேசம்

(கொழும்பு)
நாட்டிலுள்ள பாடசாலைகளில், ஆயிரம் கணனிக்கல்வி நிலையங்களை அமைப்பதற்கு கல்வி அமைச்சர் கரநிமல ராஜ பக்ஷ உத்தேசித்துள்ளார்.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடன் மேற்கொள்ளப்படவிருக்கும் இத்திட்டத்தின் கீழ், வருடமொன்றுக்கு 250 கணனி கல்வி நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன.

இதன் அடிப்படையில் நான்கு வருடத்திற்குள் பூர்த்தியடையவுள்ள இத்திட்டம், நாட்டின் கல்வித்துறையை நவீனமயப்படுத்துவதுடன், பின் தங்கிய பகுதிகளிலுள்ள மாணவர்களின் கல்வி மேம்பாடடையவும் உதவும் என கல்வியமைச்சர் தெரிவித்துள்ளார்.

இது சம்பந்தமாக நாட்டின் பல பாகங்களிலிருந்தும் ஆசிரியர்கள் பயிற்றுவிக்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (உ-8)

# வடமராட்சிக் கடலில் ஆழ்கடல் மீன்பிடி

## விலைகள் மிக வீழ்ச்சி

(மந்திகை)
வடமராட்சியில், கடந்த 6 ஆண்டுகளின் பின்னர் ஆழ்கடல் மீன்பிடியில் மீனவர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

கடந்த காலங்களில் மீனவர் வர்கள்மீது விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகளுக்கு தீர்வு காணப்பட்டதையடுத்து, 24 மணிநேரமும் மீன்பிடிக்க அனுமதியளிக்கப்பட்டதைத்தொடர்ந்தே ஆழ்கடல் மீன்பிடி மீண்டும்இடம் பெறுகிறது.

சுமார் 500 வரையான மீன்வர்கள் ஆழ்கடல் மீன்பிடியில் ஈடுபட்டு வருவதை அவதானிக்க முடிகின்றது.

இதேவேளை, ஆழ்கடல் மீனகளான சுறா, பாரை போன்றவற்றை தற்போது தாரளமாகப் பெற்றுகொள்ள முடிவதுடன் விலைகள் மிக வீழ்ச்சியடைந்திருப்பதும் குறிப்பிடத்தக்கது. (உ.23)

# கூடைப் பந்தாட்டம்

(யாழ்ப்பாணம்)
கோப்பாய் பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்க ஆதரவுடன் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியின் 150 ஆவது ஆண்டு விழாச்சபை நடத்தும் கூடைப்பந்தாட்ட சுற்றுப் போட்டியில்,

நாளை பி.ப.4.00மணிக்கு கியூ 1-கியூ 2, பி. ப. 5. 00 மணிக்கு கியூ 2-கியூ 3 ஆகிய அணிகள் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி மைதானத்தில் மோதவுள்ளன. (உ-3)

# தென்மராட்சி வலயத்தில் இன்று கோட்ட மட்ட ஆங்கில தினப் போட்டிகள்

(யாழ்ப்பாணம்)
தென்மராட்சி வலய கோட்ட மட்ட ஆங்கில, தினப் போட்டிகள் இன்று நடை பெறவுள்ளன.

சாவகச்சேரிக் கோட்டப் பாடசாலைகளுக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியிலும், பளை, கொடிகாமம் கோட்டப் பாடசாலைகளுக்கு கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி.யிலும் காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4.30 மணி வரை போட்டிகள் நடைபெறவுள்ளன. (உ)

# விதைகள் பெறமுடியாது விவசாயிகள் திண்டாட்டம்

(தென்மராட்சி)
தென்மராட்சிப் பிரதேசத்தில் மீளக் குடியமர்ந்த விவசாயிகள், விவசாயச் செய்கையில் ஈடுபடுவதற்குத் தேவையான விதைகள் இன்றிப் பெரும் கஷ்டங்களை எதிர் நோக்கிவருகின்றனர்.

தனியார் கடைகளில்கொள்வனவு செய்யப்படும் மரக்கறி விதைகள் முளைத்திறன் இன்றிக் காணப்படுவதால் அவற்றினைக் கொள்வனவு செய்த விவசாயிகள் ஏமாற்றமடைந்துள்ளனர். (உ-77)

# வரட்சித் தடுப்பு செயற்றிட்டத்துக்கு ஆலோசனைகள் ஏற்பு

கொழும்பு)
வரட்சியைத் தடுப்பதற்காகவும் நிலத்தின் தரம்குறைவுபடுவதை தவிர்க்கும்பொருட்டும் தேசிய வளங்கள் முகாமைத்துவப்பிரிவு செயற்திட்டமொன்றை வகுத்துள்ளது.

இந்தச் செயற்திட்டத்தினுள அடக்குவதற்கு ஆலோசனைகளைச் சமர்ப்பிக்குமாறு பொதுமக்களையும், பாடசாலை மாணவர்களையும் சூழல் மற்றும் இயற்கை வளங்கள் அமைச்சு கோரியுள்ளது.

நிலம் தரக்குறைவடைந்து செல்வதால் விவசாய உற்பத்தியில் ஈடுபடுத்தத்தக்க காணியின் அளவு வரவரக் குறைந்து செல்கிறது.

இதனால் நிலம் தரக் குறைவுபடுவதைத் தடுப்பதிலும், சுற்றாடலை பாதுகாத்து பின்வரும் பரம்பரைகளுக்கு வழங்குவதிலும் தலைமைச் செயற்பாட்டினை ஏற்றுள்ள அமைச்சு இவ் இலக்குகளை அடைவதற்கு சகலரையும் ஒத்துழைக்குமாறும் அறிக்கைமூலம் கேட்டிருக்கிறது. (உ)

# மீளக்குடியமரும் குடும்பங்களுக்கு வாழ்வழிகாட்ட அரசு தவறுகிறது

## அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் சுட்டிக்காட்டு

(தென்மராட்சி)
அரசுக்கும் - புலிகளுக்குமிடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தாகியதைத் தொடர்ந்து இடம்பெயர்ந்த மக்கள் மீளக்குடியமர்ந்து வருகின்ற போதிலும் இவர்களுக்கான புனர்வாழ்வுத் திட்டம் எதனையும் அரசாங்கம் இதுவரை முன்வைக்கவில்லை என யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் கவலை தெரிவித்துள்ளது.

புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தாகிஇன்றுடன் 115 நாட்களைக் கடந்துவிட்ட போதிலும் மீளக்குடியமர்ந்துள்ள குடும்பங்களுக்கு அரசு தரப்பில் எத்தகைய உதவிகளும், வசதிகளும் வழங்கப்படவில்லை.

மீளக்குடியமர்கின்ற குடும்பங்களுக்கான அடிப்படை வசதிகளான இருப்பிடம், மலசலகூட வசதிகள், குடிநீர் போன்றவற்றினையும்ஏனைய அத்தியாவசிய தேவைகளையும் வழங்க வேண்டிய பொறுப்பும் கடமையும் அரசிடம் உள்ள போதிலும்கூட, அரசாங்கம் மீளக்குடியமர்கின்றவர்கள் தொடர்பாக அசமந்தப் போக்கினையே கடைப்பிடித்து வருகின்றது என இணையம் சுட்டிக்காட்டியுள்ளது.

அரசினதும்,அரசாங்க ஊழியர்களினதும் நிலைப்பாடு காரணமாக மீளக்குடியமர்கின்ற குடும்பங்கள் மீளக்குடியமர்தலில் தற்போது அதீத நாட்டம் காட்டாமல் இருந்து வருகின்றமையும் அவதானிக்கப்படுகின்றது. (உ-77)

# வலி வடக்கு மக்கள் தம்மை சொந்த இடங்களில் மீளக் குடியமர்த்து


## மாறு கோரி நேற்று நடத்திய பேரணியை படங்களில் காணலாம்


















## நெல்லியடியில் நேற்று மக்கள் வங்கி திறந்து வைக்கப்படும் காட்சி

படங்கள்: திருநீபன், துஷ்யந்தன்

## ஊடகங்கள் அடக்குமுறையாளர்களின் கட்டுப்பாட்டில் இருப்பதால் சாதாரண மக்களின்

# கருத்துக்கள் வெளிக்கிளம்புவதில்லை

(யாழ்ப்பாணம்)

'ஆங்கிலம் இல்லையேல் எதிர்காலம்இல்லைஎன்றுகூறுவது கீழைத்தேய மக்களை மேலும் அடிமைப் படுத்தலுக்கான அடிப்படையாகவே இருக்கிறது. ஒவ்வொரு வரும் தத்தமது மொழியில் பெறும் அனுபவமும் பரீட்சயமுமே அவர்களது சிந்தனை வீச்சுக்கு உறுதுணையாக அமைகின்றன.

எமது அறிஞர்கள் இன்று பாலர்பாடசாலை முதல் பல்கலைக் கழக விழாக்கள் வரை கணனியும் ஆங்கிலமும் இல்லையேல் உங்களுக்கு எதிர்காலம் இல்லை என்ற சாரப்பட கருத்துக்களைத் தெரிவித்து வருகிறார்கள்.

உலக மயமாக்கல் ,நவகாலனித்துவம்.பல்தேசியக் கம்பனிகளின் ஆக்கிரமிப்பே இதற்குக் காரணமாகும்.

ஆங்கிலேயர் வருகையும் கல்வி முறையில் ஏற்பட்ட மாற்றமும் அவர்களை எஜமானாகக் கருதியதும் ஆங்கில மொழியின்கோலோச்சலுக்கு

> யாழ். பல்கலைக் கழக புவியியல் துறையின் ஏற்பாட்டில்கடந்ததிங்கட்கிழமைநடைபெற்ற கருத்தரங்கில்'உலகமயமாதலும் மூன்றாம்உலகில்அதன்தாக்கமும்'என்றகருப்பொருளில்கிழக்குப்பல்கலைக் கழக விரிவுரையாளர் சி.ஜெயசங்கர்ஆற்றிய உரையின் தொகுப்பு

வழிவகுத்தது.

இதைவிட,எமது ஊடகங்களும் அமெரிக்க மயப்பட்டதாகவே தமது கருத்துக்களை நகர்த்தி வருகின்றன.

நாம் உலகம் என்றும் உலக நாடுகள் என்றும் கல்விக்கூடாகவும் ஊடகங்கள் வாயிலாகவும் பெறும் தகவல்கள் மேற்குலக நாடுகளை மையப் படுத்தியவையாகவே இருக்கின்றன.

இந்த அபத்தமான கருத்து நிலையே,பயங்கரவாதம்,ஜனநாயகம் என்ற பேச்சுகளுக்குப் பின்னால் உலகமயமாக்கல் என்ற கொடிய நோய் எம்மை அறியாமலே தாக்கத் தொடங்குவதற்கு காரணமாகும்'

கல்வி, ஊடகம்,தனியார் மயமாக்கல் என்பவற்றினூடாக உலகமயமாக்கல் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

எனவே,உலகம் பற்றிய பார்வையை நாம் மாற்றிக் கொள்ள வேண்டும்.கல்வியும் ஊடகமும் எப்போதுமே மக்களின் கைகளில் இருந்ததில்லை.

அவை அடக்கு முறையாளர் வர்த்தகரின் கட்டுப்பாட்டினுள் இருப்பதனால் சாதாரண மக்களின் கருத்துக்கள் வெளிக்கிளம்ப சந்தர்ப்பம் கிடைப்பதில்லை.

(உ-106)

## பிரபாகரனை நாடு கடத்துக!

## இந்தியாவின் இந்தக் கோரிக்கையால்

# சமாதானப் பேச்சுக்கு இடையூறு ஏற்படாது

### வெளியுறவு அமைச்சர் டிரோன் தெரிவிப்பு

(நியூயோர்க்)

பயங்கரவாத அச்சுறுத்தலை ஜனநாயக அரசியல் முறைகள் ஊடாக அணுகி, தீர்வுகாண முற்பட்டதன் மூலம் இலங்கை முழுஉலகிற்கும் உதாரணமாக திகழ்கிறது.

இவ்வாறு வெளியுறவு அமைச்சர் டிரோன் பெர்னாண்டோ நியூயோர்கில் சீ. என். என். தொலைக்காட்சிக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்துள்ளார்.

அப்பேட்டியில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இப்பொழுது துப்பாக்கிகள் ஓய்ந்துவிட்டன. அதனால் ஒருவர் பேசுவது மற்றவருக்கு கேட்கிறது.

விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனை நாடுகடத்தும்படி இந்தியா விடுக்கும் கோரிக்கையால், சமாதானப் பேச்சுக்களுக்கு இடையூறு ஏற்படாது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி ஆபிரகாம் லிங்கன் போன்று உறுதியான நிலைப்பாட்டில் செல்கிறார்.

உள்நாட்டு யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவருவது மட்டுமல்ல, அதனைத் தொடர்ந்தும் நாட்டில்பொருளாதார மீள நிர்மாணத்துக்கும் அவர் அத்திவாரத்தை இட்டு வருகிறார்.

எம்மில் சில பிரிவினர் தமிழர்களை எமது நாட்டவர் என்று பார்க்க மறுப்பதில் தான் பிரச்சினை இருக்கிறது. தமிழர்கள் எமது வீட்டு உறுப்பினர்களே என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். தமிழர்கள் வெளியார் அல்லர்.

ஆனால் அவர்களை அந்நியமாக கருதுவதாலேயே அவர்கள் வன்முறைக்கு தள்ளப்படுகின்றார்கள் என்றும் அமைச்சர் டிரோன் மேலும் கூறினார். (இ)

## விபத்துக்குள்ளான சீன விமானத்தின் கறுப்பு பெட்டிகள் மீட்பு

(பீஜிங்)

சீன விமானம் விபத்துக்குள்ளான சம்பவம் தொடர்பாக தாய்வான் விசாரணைக் குழு விமான கறுப்புப் பெட்டிகளை நேற்று முன் தினம் மீட்டுள்ளது.

விமானத்தில் பொருத்தப் பட்டிருந்த இருகறுப்புப்பெட்டிகளையுமே தாய்வான் குழு கண்டு பிடித்துள்ளது.

இதன் மூலம் விபத்துக்கான காரணங்களை கண்டறிய முடியுமென தாய்வான் அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.

கடந்த மே மாதம் 25 ஆம் திகதி 225 பயணிகளுடன் தாய்வான் விமான நிலையத்திலிருந்து புறப்பட்ட 747 போயிங் விமானம் கடலில் வீழ்ந்து நொருங்கியதும்அதில் பயணித்த 121 பயணிகளின் சடலங்கள் மீட்கப்பட்டதும் தெரிந்ததே. (உ-8)

## அவுஸ்திரேலியா செல்லும் முஸ்லிம்கள் தொகையை கட்டுப்படுத்த திட்டம்

(கன்பரா)

அரசியல் தஞ்சம் கோரும் முஸ்லிம்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவது குறித்து அவுஸ்திரேலியா கவனம் செலுத்த தொடங்கியுள்ளது.

மத்திய கிழக்கு மற்றும் ஆசிய நாடுகளிலிருந்தே பெருந்தொகையான முஸ்லிம்கள் அவுஸ்திரேலியா செல்கிறார்கள், என அங்கத்தைய புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.

வருடம் ஒன்றுக்கு 5 ஆயிரதுக்கும் அதிகமான முஸ்லிம்கள் செல்வதால்அவர்களுடன் தீவிரவாத இயக்கத்தினர் அல்லது அவர்களுடன் தொடர்புடையவர்களும் வரலாம் என்ற ஊகத்தினால் இதனைத் தடுப்பது தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ள அவுஸ்திரேலியா திட்டமிட்டுள்ளது. (உ-8)

## இந்தியப் பொருட்களுக்கு இறக்குமதிதீர்வை குறைப்பு

### பாக்.நல்லெண்ண நடவடிக்கை

(புதுடில்லி)

இந்தியாவிலிருந்து இறக்குமதிசெய்யப்படும் 600 பொருட்களுக்கு பாகிஸ்தான் தீர்வையை குறைத்துள்ளது.

சார்க் அமைப்பின் தெற்காசிய சலுகைவர்த்தக உடன்படிக்கையின்கீழ் வழங்கப்படவுள்ள வரிச்செலவுத்திட்டத்தில் பாகிஸ்தான் கொள்கையளவில் இந்தியாவையும் சேர்த்துள்ளதாக இந்தியாவிலிருந்து வெளிவரும் ரைம்ஸ் ஒவ் இந்தியாஎன்ற பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

அண்மைக்காலங்களாக இவ்விருநாடுகள் இடையேயும் இருந்துவந்த பதற்ற நிலைகளை தீர்க்கும் முயற்சிகளின் ஓரங்கமாகவே பரஸ்பர வர்த்தகஅதிகரிப்பை ஏற்படுத்திக்கொள்ளும் முயற்சிகளில் பாகிஸ்தான் இறங்கியுள்ளதாக இந்தியவர்த்தக வட்டாரங்கள் கருத்துதெரிவித்துள்ளன. (உ.8)

## அல்கெய்டா சந்தேக நபர்கள் 7பேர் மொராக்கோவில் கைது

(ராபட்)

அல்கெய்டா இயக்கத்தைச் சேர்ந்தவர்கள்என சந்தேகிக்கப்படும் 7 பேரை மொராக்கோ பாதுகாப்பு பிரிவினர் கைதுசெய்துள்ளனர்.

மொரோக்கோவிலுள்ள அமெரிக்க நாட்டுத் தளத்தையும் வட அத்திலாந்திக் கடற்பரப்பில் நிறுத்தி வைக்கப்பட்ட பிரிட்டன் யுத்தக்கப்பல்களையும் தாக்க முற்பட்டார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரிலேயே இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளதாக மொராக்கோ பாதுகாப்பு அமைச்சுவட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கடந்த மே மாதத்தில்மொராக்கோவின் தலைநகர்ப்பகுதியில் இரண்டு பெண்கள் உட்பட 7பேரை அல்கெய்டா இயக்கத்தவருடன் தொடர்புடையவர்கள் எனக் கருதி கைதுசெய்யப்பட்டதும் குறிப்பிடத் தக்கது. அவர்களில் மூவர் சவூதி அரேபியர்கள் என்பதும் சுட்டிக்காட்டத்தக்கது. (உ-8)

## சுகநல மேம்பாட்டு தொடர் கருத்தரங்கு

(நெல்லியடி)

யாழ்.மாநகர சபையின் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின்கல்விப்பிரிவினரால் சுகநலமேம்பாட்டு கருத்தரங்கு யாழ்மாநகரசபையின் எல்லைக்குட்பட்ட பாடசாலைகளில் நாளைவெள்ளிக்கிழமை முதல் தொடர்ச்சியாக நடத்தப்படவுள்ளது.

இந்த கருத்தரங்கில் பாடசாலை மாணவ, மாணவியர்களின் பெற்றோரினை கலந்து கொள்ளுமாறு மாநகரசபையின் கல்வி பிரிவு அழைப்பு விடுத்துள்ளது. (உ-247)

### பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக் கழக கிளிநொச்சி மாவட்ட மாணவர் ஒன்றியப் பொதுக்கூட்டமும், புதிய நிர்வாகத் தெரிவும் இன்று வர்த்தக மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. (உ)

### உடற்பயிற்சி போட்டி

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கோட்டத்திற்கு உட்பட்ட பாடசாலைகளில் உடற்பயிற்சிப்போட்டி இம் மாத இறுதியில் இடம் பெறவுள்ளது.

இப்போட்டியிலே15-19வயதுக்கு உட்பட்ட ஆண், பெண்கள் கலந்துகொள்ள முடியும்.

போட்டிக்கான விண்ணப்ப முடிவுத் திகதி இன்றாகும். (உ-19)

### நயினையில் தண்டிகைத் திருவிழா

(யாழ்ப்பாணம்)

நயினைதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலய உற்சவத்தின் 11 ஆம் நாளான இன்று தண்டிகைத் திருவிழா இடம் பெறவுள்ளது. (உ-8)

### புலிகளின் குரல் தெளிவு

(யாழ்ப்பாணம்)

''புலிகளின் குரல்'' வானொலி சேவையை குடாநாட்டில் தற்போது தெளிவாகக் கேட்க முடிகின்றது.

கடந்த சில மாதங்களாக புலிகளின் குரல் வானொலி சேவையை குடாநாட்டில் கேட்க முடியாத நிலைமை இருந்தமை குறிப்பிடத்தக்கது. (த)

### பிணையில் விடுவிப்பு

(கொழும்பு)

சட்டவிரோதமாக மதுபானம் கடத்துவதற்கு லஞ்சம் பெற்றதாக சந்தேகிக்கப்படும் 2 பொலிஸார் லஞ்ச ஊழல் தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

1999 ஆண்டு இடம்பெற்ற மேற்படி சம்பவம் தொடர்பாகவே இவர்கள் கைதுசெய்யப்பட்டதுடன் கொழும்பு நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டபோது இருவரையும் பிணையில் செல்ல நீதவான் உத்தரவிட்டார்.

(த)

### முக்கிய கூட்டம்

(யாழ்ப்பாணம்)

சனி,ஞாயிறு,போயாமற்றும் வர்த்தக விடுமுறை தினங்களில் கடைகள் பூட்டப்படுவது பற்றிய ஓர் முக்கிய கூட்டம் இன்று வியாழக்கிழமை பி.ப. 4. 00 மணிக்கு இல. 165, மானிப்பாய் வீதியில் உள்ள யாழ்ப்பாணம் வணிகர்கழகப் பணிமனையில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் யாழ்.வணிகர்கழகஎல்லைக்கு உட்பட சகல வர்த்தக ஸ்தாபனஉரிமையாளர்களும்,முகாமையாளர்களும் தவறாது கலந்துகொள்ள வேண்டுமென கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. (உ)

செய்தக்க அல்லசெயக்
கெடும் செய்தக்க
செய்யாமை யானும்கெடும்

குறள்

## வலம்புரி

### சாண் ஏற முழம் சறுக்கும்

அரசின் சமாதான முயற்சிகள் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட்ட போது இருந்த வேகத்துடன் தற்போது முன்னெடுக்கப்படவில்லை என்று தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் பி.பி.ஸிக்கு அளித்துள்ள பேட்டியில் தெரிவித்துள்ளார். தமிழ்ச்செல்வன் கூறிய இக் கருத்து முன்னரும் கூறப்பட்டதென்பது இங்கு சுட்டிக்காட்டுதற்குரியது.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தை ஏற்படுத்துவதில் அரசு காட்டிய ஆர்வம் தற்போது இல்லை என்ற கருத்து ஏற்படாமல் பாதுகாத்திருக்க வேண்டிய பொறுப்பு அரசினுடையதாகும். குறிப்பாக ஒப்பந்தத்தில் கூறப்பட்ட விடயங்களை நிறைவேற்றி வைப்பதன் மூலம் ஓர் சுமுக நிலையைத் தொடர்ந்துபேணியிருக்க முடியும். எனினும் ஒப்பந்தம் நடந்து மூன்றுமாதங்கள் முடிவுற்ற நிலையிலும் பல விடயங்களை அரசு நிறைவேற்றவில்லை. குறிப்பாக ஆலயங்கள், பாடசாலைகள், பொது இடங்களில் இருந்து படையினர் இன்னமும் வாபஸ் பெறவில்லை.

அதேவேளை தீவகத்திற்கு விடுதலைப் புலிகள் செல்வதற்கான நிபந்தனைகள் அண்மையில் நீக்கப்பட்டு புலிகள் தீவகம் சென்றுள்ளனர். இங்கு புலிகள் யாழ்ப்பாணம் வருவதற்கும், தீவகம் செல்வதற்குமான காலம் நீண்டதாக இருப்பது சமாதான முயற்சியில் ஈடுபடும் இருதரப்பினருக்குமிடையே கசப்புணர்வை ஏற்படுத்திவிடும்.

விடுதலைப் புலிகளும் படையினரும் ஒரே இடத்தில் இருப்பது நீண்ட காலத்தில் பொருத்தமற்ற ஓர் விடயமாகவே இருக்க முடியும். அவ்வகையில் விடுதலைப் புலிகள் யாழ்ப்பாணத்தில் தமது அரசியல் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் இணங்கிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா விடுதலைப் புலிகளையும்- படையினரையும் ஒரே இடத்தில் வைத்திருப்பதென்பது எந்த நேரத்தில் என்ன நடக்குமோ என்ற அச்சம் மக்கள் மத்தியில் இருக்கவே செய்கிறது.

# பாரதி தொடக்கிய எளிய நடைக் கவிதைக்கு வலுவூட்டியவர் ஈழத்து மஹாகவியே

## சாலை இளந்திரையன்

இலக்கியத்தில் எளிமை ஆடம்பரம் என்னும் இரண்டு போக்குகளுக்கும் எப்போதும் இடம் இருந்தே வந்திருக்கிறது. நமது இலக்கண நூலிற் (தண்டியலங்காரம்) சொல்லப்படும் வைதருப்ப நெறி என்பது. பொருளிலும் சொல்லாட்சியிலும் இயல்பான இயம்பு முறையைக் குறிக்கிறது. கவுடநெறி என்பது கற்பனையிலும் சொல்லாட்சியிலும் ஆடம்பரமான இயம்பு முறையைக் குறிக்கின்றது. ஆனாலும், இந்த நூற்றாண்டில் எழுந்த எளிய நடைக் கவிதை என்னும் கொள்கையை இந்தப் பழைய நெறிகளோடு குழப்பிக் கொள்ளக் கூடாது. முன்பு, எளிய நெறி என்பது, 'எளிமையில் இன்பம்' என்னும் பொதுவான குறிக்கோள்களுள் ஒன்றாகி, கவிதை படிப்போரின் ஒருவித வகைமைப்பாட்டு ஆவலைமட்டுமே தணிவித்தது. இன்று எளிய நடைக் கவிதை எனப்படுவது, கவிதை போன்ற கலைகளைப் படித்துச் சுவைப்போர் குறிப்பிட்ட சிலரே என்ற பழநிலையை மாற்றி-எல்லோரும் படித்துச் சுவைத்துப் பொருளறிந்து பயனடையும் விதமாகக் கவிதை உருக்கொள்ள வேண்டும் என்ற நோக்கில் எடுத்துரைக்கப் படுகிறது. இந்தக் கொள்கையும், கடந்த சுமார் 50/60 ஆண்டுகளுக்குட் சில வளர்ச்சி நிலைகளை அடைந்துள்ளது. அந்த நிலைகளை எடுத்துரைத்து, அவற்றுள் ஈழத்து மஹாகவி (உருத்திரமூர்த்தி) க்கு உள்ள இடத்தை மதிப்பிடுவதே இந்த ஆய்வுரையின் நோக்கம்.

### பாமரமக்களும் புரிதல்

'எளிய பதங்கள், எளிய நடை, எளிதில் அறிந்து கொள்ளக்கூடிய சந்தம், பொது ஜனங்கள் விரும்பும் மெட்டு இவற்றினையுடைய காவியமொன்று தற்காலத்திலே செய்து தருவோன் நமது தாய்மொழிக்குப் புதிய உயிர் தருவோனாகின்றான். ஓரிரண்டு வருஷத்து நூற்பழக்கமுள்ள தமிழ் மக்களெல்லோருக்கும் நன்கு பொருள் விளங்கும் படிஎழுதுவதுடன், காவியத்துக்குள்ள நயங்கள் குறைவுபடாமலும் நடத்துதல் வேண்டும். இவ்விதம் சுப்பிரமணிய பாரதி சொல்லும்போது, 'வழக்காறு ஒழிந்ததை வைத்து எழுதித் தான் பிழைக்கும் நிலைமை பெறலாம் என்றும், புதுச் சொல் புதுநடை போற்றேல் என்றும், நந்தமிழ்ப் புலவர் நவின்ற' கொள்கைக்கு எதிரான ஒரு குரலே கேட்கிறது. அதாவது, வழக்கொழிந்த சொற்களையும் (பாமர)மக்களுக்குப் புரியாத நடையமைப்பையும் கொண்ட கவிதைகளுக்குப் பதிலாக, மக்கள் படித்த உடனே புரிந்துகொள்ளக் கூடிய (பேச்சு வழக்குக்கு மிக அருகில் உள்ள) ஒரு நடையிற் கவிதை இயற்றப் பட வேண்டும் என்ற கருத்து வலியுறுத்தப்படுகிறது.

பாரதிதாசன் தம்முடைய 'பாண்டியன் பரிசு' புத்தகத்தின் முன்னுரையில், 'எளிய நடை ஒன்றாலேயே தமிழின் மேன்மையை, தமிழின் பயனைத் தமிழர்க்கு ஆக்க முடியும் என்பது என் அசைக்க முடியாத நம்பிக்கை' என்று பேசும் போதும் மொழிநடையையே அவர் குறிப்பிட்டார் என்பது விளங்குகிறது. அதே முன்னுரையில், ('பாண்டியன் பரிசு' புத்தகத்தைப் பற்றி)' தொடக்கப் படிப்பினரும் புரிந்து கொண்டார்கள்.

இச் செய்யுளின் பொருளை எனின், அதுதான் எனக்கு மகிழ்ச்சியூட்டுவது' என்று அவர் கூறுவதும் இதனை மெய்ப்பிக்கின்றது.

### எளிய நடை எல்லா இடத்தும் பொருந்துமா?

நடையில் எளிமை என்பது மக்களுக்கு விளங்கக் கூடிய சொற்களால் மட்டுமே ஆகிவிடாது. மக்களுக்குப் பழக்கமில்லாத சிக்கலான பொருட்களையோ கருத்துக்களையோ மக்களுக்குத் தெரிந்த சொற்களைமட்டுமேவைத்துவிளக்கிவிட இலயாது. திருமணம்செல்வக்கேசவராயர்சொல்வதைப் போல எல்லாப்பொருள்களையும் எளிய சொற்களாலேயே விளங்க வைத்து விடலாம்என்பது இயல்வதென்று; சில பொருள்கள் அவைகளுக்குரிய கலைச்சொல் என்னும் பரிபாஷைச் சொற்களாலேயே சரியான விளக்கம் பெறும். அவைகளைப்பற்றிய அடிப்படை அறிவு இல்லாதவர்களுக்கு அந்தஎழுத்தோவியம் விளங்கவில்லை என்பதாலே. அதைக்கடுநடைஉடையது என்று சொல்ல இயலாது 'ஒரு பொருளைப் புரிந்து கொள்ளும் அடிப்படைப் பயிற்சி இல்லாதவர்கள் அதனிடத்து ஆர்வம் கொள்ள முடியாது' என்னும் கிராம்ப்டன் கலைக்களஞ்சியக் கூற்றும் இதையே குறிப்பாக உணர்த்துகிறது.

பாரதியின் தமிழ்ப் பணியைப் பாராட்டுகிற பாரதிதாசன், பன்னீராயிரம் பாடிய கம்பனும், இப்போது மக்கள் பால் இன் தமிழ் உணர்வை எழுப்பியது உண்டோ? இல்லவே இல்லை!' என்கிறார். ஆனால்'கம்பநாடன் கவிதையிற் போல் கற்றோர்க்கு இதயம் கனியாதே!' என்றும் 'கம்பநாடு உடைய வள்ளல் கவிச்சக்கரவர்த்தி, பார்மேல் நம்பு பாமாலையாலே நரருக்கு இன்று அமுதம் ஈந்தான்!' என்றும் பிறவாறும் கம்பன் கவிதை பாராட்டப் பட்டிருப்பதை நாம் அறிவோம். அந்தக் கவிஞனாலும் பொதுமக்களிடையே தமிழ் (இலக்கிய)உணர்வை ஈட்ட முடியவில்லைஎன்பதே, பாரதிதாசன் கம்பனிடம் காணும் குறை. அந்தக் குறைக்கு விளக்கம் தருவதுபோல, 'இந்த நாளில் இந் நாட்டு மக்கட்கு வேண்டும் பண்பு, வேண்டும் செயல்களை, கொஞ்சமும் பாரதி அஞ்சாது கூறினான்,' என்கிறார் கவிஞர். அதாவது, மக்களின்வாழ்வோடுநேரிடையாகத் தொடர்புடைய கருத்துக்களையும் செய்திகளையும் வைத்துப் பாடியதால் பாரதி, மக்களிடையே உணர்வை எழுப்ப முடிந்தது என்பதும், அப்படிச் செய்யாததாற் கம்பனால் அதைச் செய்ய முடியவில்லை என்பதும் குறிப்பு.

இந்த இரண்டுகவிஞர்களும் எளியநடை பற்றிப் பேசும் போது சொல்லாட்சி வாக்கியத்தின்(அல்லது பாட்டின்) சிக்கலற்ற அமைப்பு ஆகியவற்றையே குறித்தாலும், மக்களோடு தொடர்புடையதும் அவர்கள் விரும்பியும்எளிதாகவும் தெரிந்து கொள்ளக்கூடியதுமான பொருட்புதுமையும் எளிய நடைப்பாட்டுக்குஅவசியம் என்ற மெல்லிய ஓர்மை, பிற்காலத்திற் பாரதி தாசனுக்கு ஏற்பட்டிருந்ததுஎன்று தெரிகிறது, ஆயினும், பாரதிக்கும் பாரதிதாசனுக்கும் பிந்திய கவிஞர்களே இதைத் தெளிவாக உணர்ந்து அந்த ஓர்மையோடு பாட்டு இசைக்கிறார்கள் என்று சொல்ல வேண்டும். இந்த ஓர்மையிற் பெருமளவு தெளிவு பெற்றவராக விளங்குபவர் ஈழநாட்டு 'மஹாகவி' உருத்திரமூர்த்தி.

### மஹாகவியின் எளிய நடை

'இன்னவை தாம் கவி எழுத ஏற்ற பொருள் என்று, பிறர் சொன்னவற்றை நீர் திருப்பிச் சொல்லாதீர். சோலை, கடல், மின்னல், முகில், தென்றலினை மறவுங்கள். மீந்திருக்கும் இன்னல், உழைப்பு, ஏழ்மை உயர்வுஎன்பவற்றைப் பாருங்கள் என்று இருபது வருடங்களுக்கு முன்மஹாகவி எழுதினார். நிகழ்காலச் செய்திகளையும், பிரச்சினைகளையும் கவிதையும் ஆண்டு அதனை இன்றையயுகத்திற்கு இழுத்துவரல் அவசியமாகும் என்றுமிகச்சமீபத்திலும்அவர் எழுதினார். இன்றைய காலத்திருக்கும் மனிதர்கள், இன்றைய காலத்தியங்கும் நோக்குகள், இன்றைய காலத்து இழுப்புகள் எதிர்ப்புகள், இன்றைய காலத்து இக் கட்டுகள்' ஆகியவையே கவிதையில் இடம்பெற வேண்டும் என்று அவர் சொன்னார். இவ்வாறு எளிய நடை பற்றிய தெளிந்த ஓர்மை அவருக்கு இருந்ததனாலேதான், மஹாகவி இன்றைய மக்களின் கவனத்துக்கும் களிப்புக்கும் உரிய கருத்துக்களையும் செய்திகளையுமே தம்முடைய கவிதைகளில் முதன்மைப் படுத்தினார்.

'கவிதையிடம் மக்கள் வரவில்லையே' என்று ஏங்கும் கவிஞர்கள், மக்களின் சிந்தனைக்கு எட்டாத அல்லது அவர்களின் வாழ்வோடு எந்தத் தொடர்பும் இல்லாத நோக்குகளைப்பாடிக் கொண்டிருப்பதிற்பயனில்லை. இந்த உண்மையைப் புரிந்து கொண்டு, மஹாகவி எவ்வளவு தூரம் மக்களுடன் நெருங்கி வந்தார் என்பதை 'நேர்மை' என்னும் அவருடைய கவிதை விளக்குகிறது. வசுவிலே பயணச் சீட்டுக் கொடுத்த வசு நடத்துனர் சீட்டு வாங்கியவருக்குச் சேர வேண்டியதிலும் சற்றே அதிகமான சில்லறையைக் கொடுத்து விடுகிறார். அதைப் பார்த்ததும் மிகுதிச் சில்லறையைத் திருப்பித் தந்துவிடவே அவர் மனம் எழுகிறது. கூடவே அந்த எண்ணத்தை அமுக்கி விட்டு அவருடைய வறிய உள்ளம், 'வீட்டுக்குச் சென்றதும் என் இளைய குழந்தை என் மீதில் கால்பிடித்து ஏறுங்கால், இன்றென்றாலும் அதன் கையிலே பழம் ஒன்றை இட்டு இன்பம் ஊட்டிடலாகுமே!'' என்று தயங்குகிறது. இறுதியில், 'நேர்மை எவர்க்குமே கட்டுமா நண்ப?- காசற்றவர்கள் நாம், 'என்று அவர் கேட்கும்போது. ஓர் ஏழையின் நெஞ்சில் நேர்மைக்காக நடக்கும் பெரிய போராட்டமும் அதன் விளைவும் யாருக்கும் எளிதே விளங்குகின்றன. எடுத்துச் சொன்ன நிகழ்ச்சி இன்றைய வாழ்வின் சாதாரண நிகழ்ச்சியாதலால், பாட்டின் சொற்களையும் மீறிக் கொண்டு அதன் இலக்கியப் பயன் எல்லோருடைய நெஞ்சிலும் ஏறி விடுகிறது.

### புதுமைப்பித்தனும் மஹாகவியும்

தமிழ்ச் சிறுகதையில் ஏற்பட்ட இந்தப் புதுமையைப் பின்வருமாறு சொல்லியுள்ளார் புதுமைப்பித்தன்; 'மனிதனின் சிறுமைகளை, தப்பிதங்களை, அதில் அவன் நாடும் வெற்றியை இலக்கியமாகச் சிருஷ்டிப்பதற்கு வெகுகாலம் சென்றது. 'தமிழிற்கே விமோசனம் கிடையாது' என்று நினைத்துக் கொண்டிருக்கும் சமயத்தில் வெள்ளி முளைத்தற்போல் சில கதை எழுதுகிறவர்கள் தோன்றியிருக்கிறார்கள் .. ..'

பொருட் புதுமையாற் சிறுகதைக்குக் கிடைத்தஇந்த எளிமை தமிழ்க்கவிதைக்கு அவ்வளவு எளிதிலோ விரைவிலோ கிட்டவில்லை.


'நவீன வடிவங்களான சிறுகதை, நாவல் ஆகியன நவீன உரிப்பொருளைக் கையாண்ட வேளை கவிதைமட்டும்பழைய பொருள் மரபைப் பற்றியே சுழன்றமையால் அருகிவரும் கலை எனக்கருதுமாறாயிற்று. நிகழ்காலச் செய்திகளையும் பிரச்சினைகளையும் கவிதையில் ஆண்டுஅதனைஇன்றைய யுகத்திற்கு இழுத்துவரல்அவசியமாகும்.' இப்படிச் சொல்லியிருப்பவர் மஹாகவியே.

### பாடும் பொருளும் மஹாகவியும்

இந்தத் தெளிவு இருந்ததா

(2ம் பக்கம் பார்க்க)

## சாயி அருளமுதம்



நீங்கள் திரட்டும் செல்வம் உங்களுடையதன்று. நீங்கள் பிறருடன் பகிர்ந்து கொள்ளும் செல்வமே உங்களுடையதாகும். ஏனெனில் உங்களிடமிருக்கும் செல்வம்ஒளிக்கப்பட வேண்டியதல்ல. வெளியேகொடுக்கப்படும் செல்வம் தான், உண்மையில் உங்களுடையதாகும்.

இந்தக் காரணத்தினாலேயே அமரத்துவம் எய்தப்படுவதுசெய்கைகளினாலோ புத்திரர்களாலோ அல்லது செல்வத்தினாலோ அன்று;

தியாகத்தினால் மட்டுமே நித்தியத்துவத்தை வென்றெடுக்க முடியும் என வேதங்கள் மொழிகின்றன.

நன்றி

- நாளாந்த நற்சிந்தனை

# நெடுந்தீவு சென்ற புலி உறுப்பினர்கள் நேற்று நயினாதீவுக்கும் சென்றனர்

## மக்கள் கூடிநின்று அமோக வரவேற்பு

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப் புலிகள் நேற்று முன்தினம் பிற்பகல் 3.30 மணியளவில் நெடுந்தீவு செல்வதற்காக குறிகட்டுவான் ஊடாக வாகனத்தில் பயணம் செய்தபோது குறிகட்டுவான் காவல் நிலையத்தில் வைத்து அங்குள்ள இராணுவத்தினரால் வழிமறிக்கப்பட்டதுடன் உடற்பரிசோதனை செய்த பின்பே அனுமதிக்கலாமென்றும் கூறினர்.

அதன் பின்னர் புலி உறுப்பினர்கள் படையினருக்கு நிலைமையை எடுத்துக்கூற முற்பட்ட போது பாதைக்கு குறுக்கே பனங்குற்றிகளைப் போட்டு வீதி தடை செய்யப்பட்டது.

. நீண்ட விவாதத்தின் பின்னர் இறங்கு துறைக்குச் செல்ல அனுமதிக்கப் பட்டனர்.மாலை 4 மணியளவில் நெடுந்தீவு நோக்கி குமுதினிப் படகில் சென்ற 30 புலிப் போராளிகளையும் நடுக்கடலில் வைத்து நெடுந்தீவு மக்கள் மகிழ்வோடு வரவேற்று அழைத்துச் சென்றனர்.

நெடுந்தீவு இறங்கு துறையில் வைத்து ஆயிரக்கணக்கான மக்கள் விடுதலைப் புலிகளைக் கட்டியணைத்து முத்தமிட்டு ஆனந்தக் கண்ணீர் சொரிந்தவாறு பாதையின் இரு மருங்கிலும் நிறைகுடம் வைத்து வரவேற்று மாவீரர் நினைவாலயத்திற்கு அழைத்துச் சென்றனர்.

அங்கே ஈகச் சுடரினை நெடுந்தீவு அரசியல் துறைப் பொறுப்பாளர் கண்ணன் ஏற்றிவைத்தார். தொடர்ந்து அக வணக்கம் செலுத்தப்பட்டது. மாவீரர் நினைவுத் தூபிக்கு புலிகளின் அரசியல் பொறுப்பாளர் தமிழ்விழி, போராளி நகுலன் ஆகியோர் மலர்மாலை அணிவித்தனர்.

இதனையடுத்து நெடுந்தீவு ம.வி மைதானத்தில் பொதுக் கூட்டம் இடம்பெற்றது. இதில் ஈகச் சுடரினை போராளி வீமன் ஏற்றிவைத்தார்.

இந்து, கிறிஸ்தவ மதகுருமாரின் ஆசியுரை இடம்பெற்றது தொடர்ந்து தீவகப் பொறுப்பாளர் செம்மணன், நிதர்சனப பொறுப்பாளர் சேரலாதன், தமிழ்விழி ஆகியோர் உரையாற்றினர்.

இதேவேளை நேற்று மதியம் நயினாதீவுக்குச் சென்ற புலி உறுப்பினர்களுக்கு ஆலயக் குருமார், நிர்வாகத்தினர், பொதுமக்கள் அமோக வரவேற்பளித்தனர். ஆலய பிரதம குரு போராளிகளுக்கு காளாஞ்சி கொடுத்து ஆசி வழங்கினார். பிற்பகல் 3.30மணியளவில் நயினாதீவு ம.வியில் பொதுக்கூட்டம் இடம்பெற்றது இதில் பெருந்திரளான மக்கள் கலந்து கொண்டனர். நகுலன்,சேரலாதன், தமிழ்விழி ஆகியோர் உரையாற்றினர். (ந)

### பதிவில்லாத...

இதேவேளை யாழ்ப்பாணத்தில் மோட்டார் வாகன சாரதி அனுமதிப் பத்திரம் வழங்குவதற்கு நிரந்தரமான ஒரு ஆணையாளர் விரைவில் நியமனம் செய்யப்படவுள்ளார் என்றும் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார். (வ)

### வலி வடக்கில்...

பிறிதொரு பகுதியினர் ஒன்று திரண்டு லான்ட் மாஸ்ரர்கள், சைக்கிள்கள், மோட்டார் சைக்கிள்களில் பேரணியாக காங்கேசன்துறை வீதி, ஆஸ்பத்திரி வீதி, கண்டி வீதி வழியாக யாழ் செயலகத்தை வந்தடைந்தனர்.

பேரணியில் இடம்பெயர்ந்த மக்கள், விவசாயிகள், அரச உத்தியோகத்தர்கள், பாடசாலை மாணவர்கள் எனப் பெருமளவானோர் கலந்து கொண்டனர்.

பேரணியாக வந்த மக்கள் வலி வடக்கில் தம்மை மீளக்குடியமர்த்துமாறும் விவசாயம் செய்ய வழிவகைகளைச் செய்து தருமாறும் கோரும் மகஜர் ஒன்றை யாழ் செயலகத்தில் மேலதிக அரச அதிபர் து. வைத்திலிங்கத்திடம் கையளித்தனர். இதனைத் தொடர்ந்து யுத்த நிறுத்தக் கண் காணிப்புக் குழு அலுவலகம் சென்று அங்கும் கண்காணிப்புக் குழு பிரதி நிதி ஜோர்ஜென் பெக்லண்ட்டிடம் மகஜரைக் கையளித்தனர். (வ)

### பாரிய...

ஆட்சிஅமைத்தாலும் வட்டி உட்பட 327மில்லியன் ரூபா கடன் செலுத்தப்படவுள்ளதாகவும் இவ் வருடம் வரவு செலவுத் திட்டத்தில் எதிர் பார்க்கப்படும் வருமானம் 278 பில்லியன் ரூபா என்றும் தெரிவித்துள்ளார். (வ)

### சமாதானத்தில்..

இலங்கை அரச படைகள் வடக்கிலும் கிழக்கிலும் உள்ள பாடசாலைகள், ஆலயங்கள் மற்றும் பொது இடங்களில் தொடர்ந்தும் இருந்து வருகின்றனர் இச் செயலானது புலிகளுடன் செய்து கொண்ட உடன்படிக்கையை மீறுவதாக அமைந்துள்ளது.இதேவேளை சமாதானப் பேச்சு வார்த்தைக்கு நிகழ்சி நிரல் தயாரிப் பதில் சில பிரச்சினைகளை இரு பகுதியினரும் எதிர் நோக்கியுள்ளனர் என்றும் வடக்கு கிழக்கில் இடைக கால நிர்வாக சபை பற்றிப் பேச வேண்டும் என்று விடுதலைப்புலிகள விரும்பியுள்ள அதேவேளை ஒட்டு மொத்தமான பிரச்சினையின் ஒரு பகுதியாக இடைக்கால நிர்வாகம் பற்றிப் பேசலாம் என அரசு கூறுவதாகவும் இது இனப்பிரச்சினையில் சிக்கலை ஏற்படுத்தியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.(வ)

### சமாதான முயற்சிக்கு...

டாக்டர் ஜயலத் ஜெயவர்த்தனா, மெலிந்த மொறகொட பிரதமரின் செயலாளர் பிரட்மன் வீரக்கோன் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோ, சமாதான செயலகத் தலைவர் பேர்னாட் குணதிலக உட்பட முப்படைத்தளபதிகளும் கலந்து கொண்டனர்.

தமிழ்க்கூட்டமைப்பின் சார்பில் எம்.பிக்கள் அனைவரும் கலந்து கொண்டனர்.

இச் சந்திப்பின்போது தமிழக கூட்டமைப்பின் வடக்குக் கிழக்கு மாகாணங்களில் உள்ள இராணுவ வலயங்கள் பற்றிய விபரங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும் இராணுவம் இரண்டு வார காலத்துக்குள் அவ் இடங்களில் இருந்து இராணுவம் வெளியேற வேண்டும் எனவும் கூட்டமைப்பு எம்.பிக்கள் கேட்டுக்கொண்டனர். (ம)

### அரசு-புலிகள்...

புனர்வாழ்வு அமைச்சர் டாக்டர் ஜயலத் ஜெயவர்த்தனாவின் பாரியார் மற்றும் உயர் அதிகாரிகளும் வந்திருந்தனர்.

யாழ் மாநகர சபை முதல்வர் செல்லன் கந்தையன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் ஆங்கில நினைவுப் படிமத்தை தூதுவர் லிண்டா டபீல்டும் தமிழ் நினைவுப் படிமத்தை மேயர் செ.கந்தையனும் சிங்கள நினைவுப் படிமத்தை புனர்வாழ்வு அமைச்சரின் துணைவியாரும் திரைநீக்கம் செய்து வைத்தனர்.

இவ் விழாவில் தூதுவர் லிண்டா டபீல்ட் தொடர்ந்து பேசுகையில்:-

இலங்கையில் சமாதானத்தையும் அமைதியையும் கட்டியெழுப்புவது அரசியல் வாதிகளின் பணி அல்ல. சகல மக்களும் இந்த சமாதான முயற்சியில் ஈடுபட்டு நாட்டில் நிரந்தர சமாதானத்திற்கு குரல் கொடுக்க வேண்டிய தருணம் வந்து விட்டது.

போர் நிறுத்த நடவடிக்கைகளிற்கும் ஒப்பந்தங்களுக்கும் அப்பால் சென்று பேச்சுவார்த்தை நடத்த வேண்டிய் காலம் வந்துவிட்டது. இப் பேச்சுவார்த்தைகளின் போது வித்தியாசங்களும் முரண்பாடுகளும் காணப்படுமாயின் அவற்றை பேச்சு வார்த்தை மேசையிலேயே தீர்த்துக் கொள்ள வேண்டும்.

பேச்சுவார்த்தையில் உடன்பாடு காணப்படும்வரை அதனை தொடரும் படியும் பேச்சுவார்த்தையிலிருந்து விலகாதிருக்கும்படியும் உங்களைப் பிரதிநிதித்துவப்படுத்துபவர்களிடம் அழுத்தம் திருத்தமாக கூறுங்கள் என்றும் தெரிவித்தார்.

யாழ்மாவட்ட நீதிபதி இ.த.விக்கினராஜா, யாழ் மாவட்ட மேல் நீதி மன்ற நீதிபதி ஜே.பி.எஸ்.வரதராசா ஆகியோரும் சமூகமளித்திருந்தனர். (வ-6)

# ஜேர்மன் அரசியலமைப்பு மூலம் இனப் பிரச்சினைக்கு தீர்வு

### அமைச்சர் காமினி ஜயவிக்கிரமபெரேரா தெரிவிப்பு

ஜேர்மனின் அரசியலமைப்பு மற்றும் தேர்தல் முறைகளின் மூலம் இலங்கையின் இனச்சிக்கலுக்கு தீர்வு காண்பது குறித்து ஆலோசித்துவருவதாக நீர்ப்பாசன நீர் முகாமைத்துவ அமைச்சர் காமினி ஜயவிக்கிரம பெரேரா தெரிவித்துள்ளார்.

ஜேர்மனியின் அரசியலமைப்பு மற்றும் தேர்தல் முறைகளை அரசு-புலிகள் சமாதானப் பேச்சுவார்த்தையின் போது முன்வைப்பது குறித்து ஆராய்ந்து வருவதாகவும்,

அந் நாட்டின் அரசியலமைப்பு தொடர்பான அறிக்கைகள் தயார் செய்யப்பட்டுவருவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (த)

## செயலமர்வு பிற்போடப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

யுனிசெவ் நிறுவன ஆதரவுடன் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை வலயக் கல்விப்பணிமனையில் நடைபெறவிருந்த தரம் 6ற் கான மொழித்திறன் செயலமர்வு பிற்போடப்பட்டுள்ளது.

செயலமர்வுக்குரிய திகதி பின்னர் அறிவிக்கப்படுமென கல்வித் திணைக் களம் அறிவித்துள்ளது. (த-19)

## இளைஞன் தாக்கப்பட்டான்

(திருநெல்வேலி)

புங்குடுதீவுக்கு அரசியல் பணிகளை மேற்கொள்வதற்காகச் சென்ற விடுதலைப்புலி உறுப்பினர்களை வரவேற்கும் சுவரெட்டிகளை ஒட்டிய இளைஞர் ஒருவர் கடற்படையினரால் தாக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை சுவரொட்டிகளை ஒட்டிய பொதுமக்கள் பலர் கடற்படையினரால் எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.(த.43)




பிரிட்டிஷ் தூதுவரால் யாழ் மணிக்கூட்டுகக் கோபுரம் திறந்து வைக்கப் படுவதை படத்தில் காணலாம்.

**மரணசாதன அதிகாரப் பத்திர அலுவலரால் குடியியல் நடவடிக்கை முறைச்சட்டக் கோவையின் 529 (2)ம் பிரிவின் கீழ் வெளியிடப்படும் அறிவித்தல்.**

வழ இல:- மரணசாதன நியாயாதிக்கம்/1272

காலஞ் சென்ற நல்லதம்பி மகள் பாக்கியலட்சுமியின் மரணசாதனம் சம்பந்தமாக

**கந்தசாமி துரைராசா**
சீனகுட்டம், வல்வெட்டி
வல்வெட்டித்துறை.
-மனுதாரர்

எதிர்.

**எதிர்மனுதாரர் இல்லை**

இவ் வழக்கில் மேல் விபரிக்கப்பட்ட இறந்தவரின் மரணச் சொத்து தொடர்பின் அவரது மரணசாதனத்தை எண்பிப்பதற்கும் மரணசாதன அதிகாரப்பத்திரம் பெறுவதற்கும் மேற்படி மனுதாரரால் விண்ணப்பம் செய்யப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகிறது. மரணசாதனம் எண்பிக்கப்பட்டதென வெளிப்படுத்தி மேலே குறிப்பிடப்பட்ட மனுதாரருக்கு மரணசாதன அதிகாரப் பத்திரம் குறித்த மரணசாதனம் இணைக்கப் பட்டோ இணைக்கப்படாமலோ வழங்கப்படுவதற்கான, கட்டளையொன்று (2002.05.06) ஆக்கப்படுவதற்கு ஆட்சேபனையுடைய ஆளெவரும் 2002ம்ஆண்டு 09ம் மாதம் 06ம் திகதிக்கு முன்னர் அத்தகைய ஆட்சேபனையை சத்தியக் கடதாசியின் ஆதாரத்துடன் எழுத்தில் கோவை செய்யுமாறு தேவைப்படுத்தப்படுகிறது.

மன்றின் கட்டளைப்படி,
**சி. சந்திரலிங்கம்**
மரணசாதன அதிகாரப்பத்திர அலுவலர்,
பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றம்.

*2002. 06மாதம் 13திகதி*

வரைபு
திருமதி பாவானி சற்குணராசா
மனுதாரரின் சட்டத்தரணி
(4505)

RAW
கூரு
மிக விரைவில்
விற்பனைக்கு
வருகின்றது
(C/4436)

**யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி**
**இரண்டாம் ஆண்டு நிறைவும் கல்லூரித் தினமும்**

காலம்:- 21.06.2002 வெள்ளி பி.ப 3.30மணி
இடம்:- யாழ் தேசிய கல்வியியற் கல்லூரி, கோப்பாய்

**தலைமை**
கலாநிதி. திருநாவுக்கரசு கமலநாதன் அவர்கள
(பீடாதிபதி யா.தே.க.கல்லூரி)

**பிரதம விருந்தினர்**
கலாநிதி கருணாசேன கொடித்துவக்கு அவர்கள
(மனிதவள மேம்பாட்டு, கல்வி கலாசார அமைச்சர்)

**சிறப்பு விருந்தினர்**
திரு. ஏ.மு.நாணயக்ஹார அவர்கள்
(செயலாளர், மனிதவள மேம்பாட்டு, கல்வி கலாசார அமைச்சு)

**விசேட விருந்தினர்கள்**
திரு. D.P.அமரசிங்ஹ (மேலதிக செயலாளர்)
திரு. S.தில்லைநடராசா (மேலதிக செயலாளர்)
ஜனாப A.C.M.இப்ராஹிம (பிரதம ஆணையாளர்)
திரு. D.பஷாநாயக்கா (திட்டப்பணிப்பாளர்)
திரு. S.M. ஹலகொட (திட்டப்பணிப்பாளர்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம.

20.06.2002 யாழ் தேசிய கல்வியியற் கல்லூரிச் சமூகம
[C/4506]

**மங்களகரமான திறப்பு விழா அழைப்பிதழ்**

PC PARADISE

அன்புடையீர்

நிகழும் மங்களகரமான சித்திரபானு வருடம் ஆனி மாதம் 7ம் நாள் நாளை (21.06.2002) வெள்ளிக்கிழமை நண்பகல் 11.58 மணி தொடக்கம் 1.48 மணி வரையுள்ள கன்னி லக்கின சுபமுகூர்த்த வேளையில் 61, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள PC Paradise கணனி விற்பனை, சேவை நிலையம் திறப்பு விழாக் காண உத்தேசித்திருப்பதால் எமது வாடிக்கையாளர்கள், நண்பர்கள், நலன் விரும்பிகள் அனைவரையும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

சிறப்பு விருந்தினர்: திரு K. பூரணச்சந்திரன்
(தலைவர் வர்த்தக கைத்தொழில் மன்றம், யாழ்ப்பாணம்)
"இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்"
K. விக்னேஸ்
இயக்குனர், Pc Paradise
யாழ்பாணம்
(C/4504)